"உன் தேவனைச்சந்திக்கும்படி ஆயத்தப்படு"
ஆமோஸ் 4:12.

தேவ எக்காளம்

"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" எபே. 6:12.

நம்மில் எத்தனைபேர் மேற்கண்ட தேவவார்த்தையில் அடங்கியுள்ள மேலான சத்தியத்தைக் குறித்து மகா விழிப்புள்ளவர்களாயிருக்கின்றோம் என்பதைக் கர்த்தர் ஒருவரே அறிவார். நம்முடைய

(30-ம் பக்கம் பார்க்க)

Vol. 13] பெப்ரவரி 1981 [No. 2

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உங்கள் அன்பின் கவனத்திற்கு.

உங்கள் சந்தாவைப் புதுப்பிக்கும்போதும், கர்த்தரு ஊழியத்திற்கெனக் காணிக்கைகளை அனுப்பும்போதும் அ கூர்ந்து மறவாமல் உங்கள் பதிவுஎண்ணை மணிஆர்டர் கூப்பனி அடியில் குறிப்பிடுங்கள். உங்கள் பெயருக்கு நேராகப் பணத் வரவு வைப்பதற்கும், உங்களுடன் தொடர்பு கொள்ளுவதற் இது மிகவும் அனுகூலமாயிருக்கும். இதைச் செய்ய நீங்கள் த கையில், பொன்போன்ற விலையேறப்பெற்ற நேரத்தை படுத்தி அநேக நூற்றுக்கணக்கான முகவரிகளின் பெரிய பட் லைத் தேடவேண்டிய கஷ்டமான சூழ்நிலை உருவாகிவிடுகின்ற

சிலர் உறையிலுள்ள அரசாங்க லைசென்ஸ் என் M. 8850-ஐ தவருகக் குறிப்பிடுகின்றீர்கள். இது உங்கள் பதி எண் அல்ல, உங்கள் பதிவு எண் உங்கள் முகவரியை ஒட்டி தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

எந்தப் பெயருக்குப் பத்திரிக்கை உங்கள் வீட்டிற்கு வரு றதோ அந்தப் பெயரையே எப்பொழுதும் அன்புடன் குறிப்பிடு கள். இல்லாவிடில் ஒன்றுக்கும் அதிகமான பத்திரிக்கைக அனுப்ப ஏதுவாகும்.

சந்தாப் பாக்கியுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் உடனே த வுடன் சந்தாக்களை அனுப்பி உதவுங்கள். 1978, 1979 ஆண்டு ளுக்குக்கூட சந்தாப் பாக்கியுள்ள அன்பர்கள் உண்டு. அச்சகத்தா ருக்கு அவர்களுடைய அச்சுக்கூலிகளை மிகவும் நாணயமாக நா செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். கடன் பளுவை அவர்கள சுமக்கவும் இயலாது. நாமும் கடன்படக்கூடிய நிலையில்லை.

காகிதம், அச்சுக்கூலி, பிளாக்குகள் செய்ய ஆகும் அனைத் செலவினங்களையும் கணக்கிட்டுப் பார்க்கையில் பத்திரிக்கையின் அசலான விலைக்கிரயம் மாத்திரம் ஆண்டுக்கு ரூ 7/- (ஏழு) ஆகின்றது. இத்தொகையை அனுப்பக்கூடிய வசதியுள்ள மக்கள் அன்புடன் அனுப்பி உதவுங்கள். கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் மிகவும் கைத்தாங்கலாகவிருக்கும். சிலர் இந்த தொகையை அனுப்பிவருகின்றீர்கள். மிகவும் நன்றிகூறுகின்றேன்.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் சீனர்கள் இந்தியாவின் மீது படையெடுத்தார்கள். சீனர்களின் படையெடுப்பைப்போல இந்தியாவின் சரித்திரத்தை அதிர்ச்சியுறப்பண்ணிய நிகழ்ச்சி வேறெதுவுமே கிடையாது. சீனர்கள் இந்தியாவின் மீது எதற்காகப் படையெடுத்தார்கள்? ஏன் மீண்டுமாகத் திரும்பிச் சென்றுவிட்டார்கள்? என்பதைக் குறித்து நிறைய எழுதப்பட்டுள்ள போதினும், இந்தியாவிற்குள் நுழைந்த அவர்கள் என்ன செய்தார்கள் என்பது குறித்து த்தினச் சுருக்கமான செய்திகள் கிடைத்தன.

தற்சமயம் அருணாச்சலப் பிரதேசம் என்றழைக்கப்படும் நேஃபா (NEFA) பிராந்தியத்தின் பெரும்பகுதி 30-லிருந்து 45 நாட்கள் வரை அவர்களின் ஏக போகமான ஆதிக்கத்தின் கீழிருந்தது.

நேஃபா பிராந்தியத்தின் கிராமங்களுக்குள் நுழைந்த அவர்கள் காட்டுத்தனமாகத் துப்பாக்கியால் கிராம மக்களைச் சுட்டுத்தள்ளி எவ்விதமான இடர்களும், அழிவுகளும் விளைவிக்காமல் கிராமங்களுக்குள் சென்று மக்களோடு நேரில் மிகவும் அன்புடன் பழகினர். அம்மக்களுக்குச் சிகரெட்டுகள் முதலியவற்றைக் கொடுத்தனர். அம்மக்களின் மொழியை முன்பதாகவே சிறப்புறக் கற்றுக்கொண்டு அம்மக்களின் தாய் மொழியிலேயே அவர்களுடன் சம்பாஷித்து அளவளாவினர். கிராமங்களுக்குச் செல்லும் சீனர்கள் தாங்கள் செல்லும் கிராமத்தின் தலைவனைக் கண்ணியமாக அழைத்து வந்து அவருக்கு முதன்மையான ஆசனம் அளித்துக் கிராமத்தின் மற்ற மக்களையும் அழைத்து அமரச்செய்து அம்மக்களைப் பார்த்து "நாங்கள் உங்களை இந்தியாவின் கொடுமையான ஆட்சியிலிருந்து விடுவிக்க வந்திருக்கின்றோம். நீங்களும், நாங்களும் ஒரே ஜனங்கள். நம்மிரு திறத்தாரின் உருவமைப்பு ஒன்றாக இருக்கின்றது. நம்முடைய கண்கள் ஒத்த அமைப்பை உடையவைகள். நம்முடைய பாஷையும்கூட ஒன்றேதான். இந்தியர்களுக்கும், உங்களுக்கும் எவ்விதத்திலாகிலும் ஒற்றுமையிருக்கின்றதா? அவர்கள் உங்கள் பாஷையைப் பேசுகின்றார்களா? உங்களுக்கும், அவர்களுக்கும் எந்தக் கோணத்திலாயினும் ஒரு பந்த பாசமுண்டா?" என்று கூறிக்கொண்டே தாங்கள் சிறைபிடித்துக் கொண்டுவந்த ஒரு சீக்கிய போர்வீரனை அவர்களுக்கு முன் நிறுத்தி "இதோ இவனைப் பாருங்கள். இவன்தான் அப்பட்டமான இந்தியன். அவனது தாடியையும், தலைப்பாகையையும் பாருங்கள். உங்களில் யாருடைய சாயலில் அவனிருக்கின்றான்? நாம் இருவரும்தான் ஒரே இனத்தவர்" என்று இவ்வண்ணமாகக் கூறிக்கொண்டே கிராமத்திற்குப்

பக்கத்திலுள்ள பாலங்கள், நதிகள், நீரோடைகள், குறுக்குவழியான ஒற்றையடிப் பாதைகள், இந்திய ராணுவத்தின் நடமாட்டங்கள், அவர்கள் அமைத்துள்ள தடைகள் போன்றவைகளை விபரமாகக் கேட்டறிந்து கிராம வாசிகளில் ஒன்றிரண்டு பேரைத் தங்களுக்குத் துணையாகக் கூட்டிக்கொண்டு அடுத்த கிராமத்திற்குச் சென்று அதையும் தங்கள் வசப்படுத்தினர். இதற்கிடையில் முதல் கிராமத்தில் தரித்திருக்கும் மற்ற சீன ராணுவத்தினர் மாசே துங்கும், தலாய் லாமாவும் சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் ஒன்றாக அமர்ந்து தேயிலைப் பானம் பருகிப் பேசிக்கொண்டிருக்கும் பாவனையில் எடுக்கப்பட்டக் கவர்ச்சிகரமான புகைப்படங்களைக் கிராமத்திலுள்ள அப்பாவி புத்த மக்களுக்கு விநியோகித்து, கிராம மக்களின் தாய் பாஷையில் எழுதப்பட்டத் துண்டுப் பிரசுரங்களையும், இதரப் புத்தகங்களையும் அளித்தனர்.

அறுவடை காலத்தில் வந்திருந்த சீன ராணுவத்தினர், கிராம மக்களுடன் சேர்ந்து வயல்களில் தோளுக்குத் தோள் கொடுத்து கிராம மக்களுக்கு ஒத்தாசையாகத் தானியப் பயிர்களை அறுத்தனர், நிலங்களை உழுதனர், விதை விதைத்தனர். அதிகமான மகசூலை நிலத்திலிருந்து எவ்வாறு பெறலாமென்று மக்களுக்கு ஆலோசனை கூறினர். நீர்ப்பாசன முறைகளில் அவர்களுக்குள்ள கஷ்டங்களுக்கும் பரிகாரம் கூறினர். அம்மக்களின் மார்க்கச் சடங்காச்சாரங்களில் சீனர்கள் சிறிதும்கூடத் தலையிடவில்லை. மாறாக அவர்களுடைய மதச்சடங்குகளிலும், தொழுகைகளிலும் பக்திவினயத்தோடு கலந்துகொண்டனர். ஒவ்வொரு நாள் மாலை வேளைகளிலும் கிராம மக்களுடன் சேர்ந்து அவர்கள் விளையாட்டுகள் விளையாடினர். அத்துடன் கிராம மக்களுக்கும் புதுப்புது விளையாட்டுகளைக் கற்றுக் கொடுத்தனர்.

தாங்கள் போரில் கொன்ற இந்திய ராணுவ வீரர்களை மிகுந்த கவலையோடும், சிறந்த கவுரவத்தோடும் அடக்கம் செய்தனர்.

இறுதியாகச் சீனர்கள் இந்திய மண்ணிலிருந்து வெளியேறுகையில் மேற்குறிப்பிட்ட கிராம மக்களிடமிருந்து கண்ணீர் நிறைந்த கண்களோடு வெளியேறி இருக்கின்றனர். "நாங்கள் எப்படியாவது ஒருநாள் திரும்பவும் உங்களண்டை வருவோம். நாம் அனைவரும் ஒருவரே" என்ற வார்த்தைகளுடன் சீனர்கள் கிராம வாசிகளைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு விடைபெற்றுச் சென்றிருக்கின்றனர். இவ்விதமாகச் சீனர்கள் ஒரு ஆழ்ந்த அன்பைத் தங்களுக்குப்பின் நேஃபாவின் கிராமங்களில் விட்டுச் சென்றபோதிலும் சீனர்கள் எவ்வளவு தந்திரசாலிகள், நயவஞ்சகர்கள், ஏமாற்றுவித்தையில் கரைகண்ட சமர்த்தர்கள் என்பதை அக்கிராம வாசிகள் வெகு சீக்கிரத்திலேயே தெள்ளத்தெளிவாகப் புரிந்துகொண்டு விட்டார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு மேற்கண்ட சம்பவம் எத்தனை ஆழமானதோர் பரம சத்தியத்தைப் புகட்டுகின்றது தெரியுமா? சத்துருவாகிய சாத்தானின் தலைசிறந்த தந்திரச் செயல்களில் பிரதானமானது தனது சுயரூபத்தைக் காண்பிக்காமல் மறைத்துத் தன்னை நல்லவன்போலவும், நம்மேல் இரக்கமும், அன்பும், பட்சாதாபமும் கொள்ளுபவன்போலவும் நடித்துச் சிநேகிதனைப்போல நம்மை மேற்கொள்ளுவதுதான். சத்துருவின் இந்த மா பயங்கரக் கபட நாடகம் நம்முடைய ஆதித்தாய் தந்தையர்களிடத்தில்தான் முதலில் அரங்கேற்றப்பட்டது. தேவன் அன்பற்றவர், பொய் சொல்லக்கூடியவர், மாய்மாலம் செய்பவர், மனிதன் நன்றாகச் சுகித்து வாழ்ந்து அகமகிழ்ந்திருப்பதைப் பொறுக்கமாட்டாத கர்வி என்பது போன்ற பொய்யின் வார்த்தைகளைச் சாடையாகச் சொல்லாமல் சொல்லி நமது ஆதித்தாய், தந்தையர்கள்மேல் அளவற்ற அன்பும், பரிவும் தான்மாத்திரம் கொண்டிருப்பவனைப்போல நடித்து "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாமென்று தேவன் சொன்னது உண்டோ?" என்ற கேள்வியைப் பரிவுடன்கேட்டு இறுதியில் முடிவற்ற நித்திய தேவகோபாக்கினையை அவர்கள் மேலும், அவர்களின் சந்தானத்தின் மேலும் குவித்துவிட்டுச் சென்றான்.

தன் சுயரூபத்தையும், தனது அழிவாற்றலையும் எப்பொழுதும் மறைப்பதுதான் பிசாசானவனின் சிரேஷ்டமான குணமாகும். அவன் இரக்கமற்றவன், கொடியவன், மனுஷ கொலைபாதகன், கெர்ச்சிக்கிற சிங்கம். ஒவ்வொரு ஆத்துமாவின் நித்திய விலைமதிப்பை அவன் நன்கு உணர்ந்துள்ளபோதினும் அந்த ஆத்துமாவை எப்படியாவது முடிவில் அழித்துப்போடுவதே அவனது குறிக்கோளாகும். "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2 கொரி. 2:11) என்றார் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல்.

சாத்தானுடைய தந்திரங்கள் ஏதேனின் காலம் தொட்டதான மிகப் பழமையானதொன்றாயினும் அந்தப் பண்டைய தந்திரத்தையே அவன் ஒவ்வொருவரிடமும் செயல்படுத்துவதில்லை, என்பதை நாம் நன்கு அறியவேண்டும். "ஒவ்வொரு ஆவிக்குரிய முதிர்ந்த மனிதனும் பிசாசானவன் தனக்கெதிராகக் கொண்டுள்ள உபாய தந்திரங்களைத் தனக்கே உரித்தான தனி அதிகாரமாக எழுதக்கூடும்" என்று ஒரு பக்தன் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுக்கு ஆள் வித்தியாசமாக அவன் தனது தந்திரச் செயல்களைச் செயல்படுத்துகின்றான். நம் ஒவ்வொருவரின் பெலவீனமான பகுதிகளையும் அவன் நன்கறிவான். எனவே அவன் தாக்கும்போது பெலவீனமான பகுதியைத்தான் குறிப்பாகத் தாக்குவான். மாம்ச இச்சையில் விருப்பம் காட்டக்கூடியவர்களை அதைக்

கொண்டே தாக்கி வீழ்த்துவான். ஆகாரத்தில் பெரும் நாட்டமுடையவர்களைக் கொழுமையான போஜனங்களைக் கொடுத்து மடங்கடிப்பான். வீண் வார்த்தைகள் பேச இடமளிப்போருக்கு அதற்கான நல்ல வாயாடிகளை அனுப்பிக்கொடுத்துப் பரிசுத்த நிலையிலிருந்து கீழே தள்ளுவான். பண ஆசையுடையோருக்கு அதனைக்கொடுத்தே அவர்களின் மேலான பரம அழைப்பையும், ஆத்தும வாஞ்சையையும் இழந்துபோகும்படிச் செய்வான்.

நாம் விழிப்புடனில்லாமல், கவலையீனமாக இருக்கும் சமயம் பார்த்துத் தனது அம்புகளை நாணிலே தொடுத்து நம்மேல் எய்து நம்மை மடங்கடித்துவிடுகின்றான். ஆனபடியால்தானே பேதுரு தமது நிருபத்தில் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்......." (1 பேதுரு 5:8) என்று குறிப்பிட்டார். "....சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள்" (லூக். 22:40) என்று அருமை இரட்சகர் குறிப்பிட்டதும் சாத்தானின் தந்திரச் செயல்களை மனதில் கொண்டுதான்.

சாத்தானுடன் நாம் எதிர்த்து நின்று போராடுவதற்கு முன்னர் அவனுடைய வலிமையையும், அவனது தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் நாம் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ராணுவ தளபதி மாண்ட்கோமரி என்பவர் ரோமல் என்ற தளகர்த்தனின் படைகளை முறியடித்ததின் ஒரேகாரணம் மிகவும் கருத்தூன்றி, நீண்டகால வேதனையோடு பிரயாசங்கள் எடுத்துத் தனது எதிரியாகிய ரோமலின் யுத்த தந்திரங்கள், முந்தைய போர்களில் அவன் கையாண்ட உபாயங்கள், அவனுடைய குணாதிசயம், அவனுடைய பழக்க வழக்கங்கள், அவனுடைய மனோபாவம் போன்றவற்றை நன்றாக அறிந்து கொண்டு அவனுடன் யுத்தம் செய்ததுதான் என்று கூறப்படுகின்றது.

பரிசுத்த வேதாகமம் சாத்தானை "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" (2கொரி. 4:4) என்று அழைக்கின்றது. மிகுந்த அதிகாரம் பொருந்திய அவன் ஐந்தாவது ஸ்தானத்தை வகிக்கின்றான் என்று HOMER DUNCAN குறிப்பிடுகின்றார். பிதா, குமாரன் பரிசுத்தாவி சரிசமமான வல்லமையுடையவர்கள். நான்காவது பிரதான தூதனாகிய மிகாவேல் (வெளி. 12:7,8) ஐந்தாவது ஸ்தானத்தை சாத்தான் கொண்டிருக்கிறான் என்கின்றார் அவர். எனவே நாம் அவனைக் குறித்து அத்தனை எளிதாக நினைத்துக்கொள்ளக் கூடாது. எனினும் கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாகட்டும். சாத்தான் வல்லமையுடையவன் (MIGHTY) தான், ஆனாலும் அவன் சர்வவல்லமை (ALMIGHTY)யுடையவன் அல்ல அவன் அதிகாரமுடையவன் (POWERFUL)தான். ஆ

னும் அவன் சர்வ அதிகாரம் (OMNIPOTENT) உடையவன் அல்ல. சாத்தானுக்கு மேலான ஆளுகை உண்டு என்பது மெய்தான், ஆயினும் அவனது ஆளுகை சர்வ வல்லமையுடைய தேவனால் மட்டுப்படுத்தப்பட்டு அவரது அனுமதியின்படியே நடக்கின்றது. (யோபு 1:12; 2:6)

"உலகத்திலிருக்கிறவனிலும், உங்களிலிருக்கிறவர் பெரியவர்" (1 யோவா. 4:4) என்ற அருமையான தேவ வார்த்தைக்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும் களிகூரக் கடமைப்பட்டிருக்கின்றான். சாத்தான் ஒரு தோற்கடிக்கப்பட்ட சத்துரு என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். தேவகுமாரன் சிலுவை மரத்தில் நிர்ப்பந்தனாய் சத்துருக்களின் நிந்தைகள், அவமானங்களுக்கு மத்தியில் தொங்குகையில் சாத்தானும் அவனது சேனைகளும் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதாக ஆர்ப்பரித்தார்கள். ஆனால், அந்தச் சிலுவை மரத்தில்தானே சாத்தானும் அவனது சர்வ சேனைகளும் முறியடிக்கப்பட்டன. (கொலோ. 2:14,15; எபி. 2:14,15)

சாத்தான் ஒரு தோற்கடிக்கப்பட்டதான சத்துரு என்பதைக் கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ளாத வரையிலும், கிறிஸ்து இரட்சகரில் தங்கள் மேலான நிலையை நன்கு புரிந்துகொள்ளாத வரைக்கும், தேவன் தங்களுக்கு அளித்துள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தத் தெரியாத வரைக்கும் அவர்கள் சாத்தானால் தோற்கடிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. சாத்தான் ஒரு பயங்கர அரக்கன். பரிசுத்தவானாயினும், பாவியானாலும் சரியே அவர்கள் அவனை அனுமதிக்கும் பட்சத்தில் தன் அதிகாரத்தில் உள்ள வரைக்கும் அவர்களை ஓராயிரம் வழிகளில் நிர்ப்பாக்கியர்களாக்கி, அவர்களை வேதனைப்படுத்துவதில் மனமகிழ்ச்சியுடையவனாயிருப்பான்.

நம்முடைய சுயபெலத்தைக் கொண்டு சாத்தானை நாம் ஒருபோதும் மேற்கொண்டுவிட முடியாது. வெளிப்படுத்தின விசேஷம் 12-ம் அதிகாரம் 11-ம் வசனம் இவ்வாறுள்ளது. "........ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்".

நாம் ஜெயம் பெறவேண்டுமானால் கல்வாரியில் சிந்தப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்தான் அவனை ஜெயிக்கமுடியும். தேவகுமாரனின் இரத்தமே நமது வெற்றியின் இரகசியமாகும். தனது விலையேறப்பெற்ற இரத்தத்தால் சாத்தானின் தலையை நசுக்கிப்போட்டு மரணத்தை ஜெயமாக விழுங்கிய கர்த்தாவின் பரிசுத்த இரத்தத்தை நாம் பூரண விசுவாசத்தோடு சாத்தானுக்கு எதிராக ஜெபத்துடன் முன்வைக்க வேண்டும். அந்த விலையேறப்பெற்ற இரத்தத்தின் மகா வல்லமையை நாம் அதிகமாக ஜெபத்து

டன் தியானித்துக் கிறிஸ்துபெருமானின் சிலுவைவெற்றியை நமது வெற்றியாக்கிச் சாத்தானைத் திடமாகக் கடிந்துகொள்ளவேண்டும்.

ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தையும், அதின் மூலமாயுள்ள நமது வெற்றியையும் நாம் எப்பொழுதும் சாத்தானுக்கு நினைவுப்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும். நம்முடைய ஒவ்வொரு பாவச் சூழ்நிலையிலும் கல்வாரியின் திரு இரத்தத்தையே நாம் நினைவுக்குக் கொண்டுவருதல் அவசியமாகும்.

"தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" என்று பார்க்கின்றோம். "சாட்சியின் வசனம்" என்பது "தேவபக்தியுள்ள வாழ்க்கை"யைக் குறிக்கும் என்று வேத வியாக்கியானிகள் கூறுகின்றனர். தங்கள் சரீரத்தை, ஜெபம், உபவாசம் போன்ற தேவ கிருபையின் ஏதுக்களால் ஒடுக்கிக் கட்டுப்பாடான பரிசுத்த ஜீவியம் செய்யும் மக்களிடம் சாத்தானின் தந்திரங்கள் இலகுவாகப் பலித்து வெற்றிபெற முடியாது. சத்துரு எப்பொழுது தாக்குவான்? எப்படித் தாக்குவான்? என்பதையெல்லாம் அவர்கள் முன்கூட்டி ஆவிக்குள்ளாக உணர்ந்து அதற்கேற்ற முறையில் தேவ பெலத்தைக் கொண்டு அவனைத் தாக்கி வெற்றி பெறுவார்கள். நிமிஷம் தோறும் அவர்கள் சத்துருவின் தாக்குதல்களைக் குறித்து ஜெபத்துடன் விழித்துக் கவனித்துக் கொண்டிருப்பதால், அவனது அக்கினியாஸ்திரங்கள் அக்கினியில் பட்ட நூல் போல அழிந்துபோகும்.

எபேசியர் 6:13-17 வசனங்கள் ஆத்தும அழிம்பனுக்கு எதிரான நமது போரில் நாம் எப்படி அவனுக்கு எதிராக யுத்தம்செய்வது என்பது பற்றியும், நாம் பயன்படுத்தக்கூடிய ஆயுதங்கள் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தேவ வசனங்களின்படி நாம் நம்மை ஆவிக்குரிய ஆயுதபாணிகளாக்கிச் சத்துருவுக்கு எதிராகச் சிலுவைக் கொடியுடன் ஜெயவேந்தர்களாக நிற்போமாக.

"ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக். 4:7) என்று காண்கின்றோம்.

பாவச் சோதனையின் சிறிய அசுத்த எண்ணம் சத்துருவால் நமது உள்ளத்தில் போடப்பட்ட அதே கணத்திலேயே அதை கிள்ளி எறிந்துபோடவேண்டும். உள்ளத்தில் அதைப் பேணிப் பாதுகாத்துச் சிந்திப்போமானால் அது கர்ப்பம் தரித்துப் பாவத்தைப் பிறப்பித்து தேவ சமாதானத்தை நம் உள்ளத்திலிருந்து அகற்றிப்போடும். சத்துருவின் ஒவ்வொரு தீயகிரியைக்கும், பாவ எண்ணத்திற்கும் நாம் எப்பொழுதும் எதிர்த்து நிற்கும்போது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான்.

அருமை இரட்சகருடைய பரிசுத்த ஐக்கியத்தில் சதா நிலை கொண்டு வாழும் உபவாசத்தோடுகூடிய உறுதியான நல்ல ஜெப வாழ்க்கை, தேவனுடைய வசனங்களின் அடிப்படையில் ஆழமாக வேருன்றியதான ஒரு பரிசுத்த ஜீவியம், பரிசுத்தாவியானவரால் வழிநடத்தப்படும் திடமான ஒரு ஆவிக்குரிய ஜீவியத்திற்கெதிராகச் சத்துருவின் எந்தத் தாக்குதலும் தாக்குப்பிடிக்கமுடியாது.

தன்னுடைய இறுதி அழிவுகாலம் சமீபித்து வந்துவிட்டதென்று அறிந்த சாத்தான் மகா கொந்தளிப்போடு கர்த்தாவின் பரிசுத்த மக்களுக்கு எதிராக இந்நாட்களில் கடும் போர் புரிந்துகொண்டிருக்கின்றான். அநேக தேவ மக்களை அவன் தனது அந்தகாரக் கண்ணிகளில் சிக்கவைத்துக்கொண்டுமிருக்கின்றான்.

இந்தப் போரில் நாம் வெற்றிபெற நமது நேசரையே நாம் சார்ந்துகொள்ளுவோம். அவர் நமக்காக யுத்தம் செய்வார். ஏனெனில் யுத்தம் கர்த்தருடையது (1 சாமு. 17:47). கர்த்தரே யுத்தத்தில் வல்லவர் (யாத். 15:3).

"கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணுவார், நாம் சும்மாயிருப்போம்" அல்லேலூயா.

"......உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்".

(D. L. MOODY)

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்........" (மத். 11:28)

நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடத்தில் மனத்தாழ்மையைவிடக் கடினமான பாடம் வேறெதுவுமே கிடையாது. அது மனிதர்களின் பள்ளிக்கூடங்களிலல்ல, கிறிஸ்து பெருமானின் பாடசாலையிலேயே கற்பிக்கப்படுகின்றது. எல்லா தாலந்துகளைக் காட்டிலும் அது அபூர்வமான ஒன்றாகும். சாந்தத்திலும், மனத்தாழ்மையிலும் தங்களின் எஜமானரின் அடிச்சுவடுகளை நெருங்கிப் பின்பற்றிச் செல்லும் ஒரு மனிதனையோ அல்லது ஒரு ஸ்திரீயையோ நாம் கண்டுபிடிப்பது மிகவும் அபூர்வமான காரியமாகும். நமதருமை இரட்சகர் தமது மானிடவதாரத்தின் நாட்களில் தம்முடைய சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்த கடினமான பாடம் அது என்று நான் விசுவாசிக்கின்றேன்.

நாம் போதுமான அளவிற்குச் சாந்தமுள்ள மக்களாயிருப்போமாயின் கர்த்தரிடமிருந்து நிச்சயமாகவே பெரிய ஆசீர்வாதம்

களைப் பெற்றுக்கொள்ளலாம். அநேகர் மனத்தாழ்மையுடன் கர்த்தரைச் சார்ந்திருக்காமல் தங்கள் மேட்டிமையால் தங்களையே உயர்வாக எண்ணித் தங்களைச் சார்ந்திருக்கிறபடியால் ஆண்டவரிடமிருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடாதவர்களாயிருக்கின்றார்கள். தேவன் எப்பொழுதும் தாழ்மையுள்ள மக்களையே ஆசீர்வதிக்கின்றார். அவருக்கு முன்பாகத் தன்னைப் புழுதிமட்டாகத் தாழ்த்தி அவரை நோக்கும் எந்த ஒரு ஆத்துமாவும் ஏமாற்றத்துடன் செல்லுதல் கூடாத காரியமாகும். "நல்ல பங்கை" (BETTER PART) மரியாள் இயேசுவின் பாதத்தில்தான் தெரிந்துகொண்டாள்.

"என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கிறிஸ்து இரட்சகர் கூறியதற்கு அவர் கொடுத்ததான காரணத்தை நீங்கள் எப்பொழுதாவது கவனித்தீர்களா? "இந்த யுகத்தில் நான்தான் மிகவும் முற்போக்கான சிந்தனையாளன். எந்த ஒரு மனிதனும் செய்திருக்காத அநேக அற்புதங்களை நான் நிகழ்த்தியிருக்கின்றேன். ஓராயிரம் வழிகளில் நான் தெய்வீகமான எனது வல்லமையைக் காண்பித்திருக்கின்றேன்" என்று அவர் திடமாகச் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர் அப்படிப்பட்டதான காரணம் கூறாமல் "நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கின்றபடியால்" என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுகின்றார்.

மூன்று புருஷர்களின் முகங்கள் பிரகாசித்ததாக நாம் வேதாகமத்தில் வாசிக்கின்றோம். இவர்கள் அனைவரும் சாந்தத்திலும், மனத்தாழ்மையிலும் பிரசித்தி பெற்றவர்களே. கிறிஸ்து இரட்சகரின் முகம் மறுரூப மலையில் பிரகாசமுற்றதாகவும், 40 நாட்கள் தேவனோடு மலையில் சஞ்சரித்துவிட்டுத் திரும்பிய மோசேயின் முகம் பிரகாசித்ததாகவும், ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக நின்ற ஸ்தேவானின் முகம் தேவ மகிமையால் நிறைந்து பிரகாசித்ததாகவும் நாம் அறிகின்றோம். நம்முடைய முகங்களும் கூடப் பிரகாசிக்க வேண்டுமென்று நாம் விரும்புவோமானால் தாழ்மையின் பள்ளத்தாக்கிற்குள் நாம் கட்டாயம் இறங்கிச் சென்று தேவனுக்கு முன்பாகப் புழுதியாக நாம் நம்மைத் தாழ்த்தவேண்டும்.

"மனத்தாழ்மையின் பள்ளத்தாக்கிற்குள் இறங்குவது மகா கடினம். பள்ளத்தாக்கின் கீழ் நோக்குப்பாதை கரடுமுரடானது, செங்குத்தானது. ஆனால், அந்தப் பாதையில் நாம் ஒருமுறை சென்றுவிட்டால் அது மிகவும் பயனுள்ளதென்றும், வளமுடையதென்றும், அழகானதென்றும் கண்டு கொள்ளுவோம்" என்று பக்தன் ஜான் பன்னியன் கூறுகின்றார். சாந்தம், மனத்தாழ்மை என்ற திவ்விய சீலத்திற்கு எதிராக எந்த ஒரு மனிதனும் இவ்வுலகில் குரல் எழுப்பக் கூடாதவனாயிருக்கின்றான். மாறாகத் தேவனற்ற மனிதர்களும்கூட சாந்தம் என்ற தேவ சீலத்தைக் குறித்துப் பிரமிப்படைகின்றனர்.

ஒரு சமயம் அகஸ்டீன் என்ற பரிசுத்தவானை யாரோ ஒருவர் அணுகித் தேவ கிருபைகள் அனைத்திலும் முதன்மையானது எது என்று கேட்டாராம். அதற்கு அவர் மாறுத்தரமாக "மனத்தாழ்மை" என்று பதிற்கூறினாராம். இரண்டாவது கிருபை எது என்று திரும்பவுமாக அவரைக் கேட்டபொழுது "மனத்தாழ்மை" என்றே அவர் பதிற்கூறினாராம். மூன்றாவது எது என்று கேட்டபோது அதற்கும் அவர் "மனத்தாழ்மை" என்றுதான் விடை பகர்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. நாம் மனத்தாழ்மையுடையவர்களாயிருப்போமாயின் அனைத்துத் தேவ கிருபைகளையும் உடையவர்களாயிருப்போம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் உணர்ச்சிமிக்கதானதோர் தாவரத்தை நான் கண்டேன். எனது நாசியின் சுவாசக் காற்று அதின்மேல் பட்ட மாத்திரத்திலேயே அது தன் தலையைத் தாழ்த்திவிட்டது. எனது விரலால் நான் அதைத் தொட்டபோது அப்படியே சுருங்கி ஒட்டிப்போயிற்று. மனத்தாழ்மையும்கூட அவ்விதமானதோர் உணர்ச்சிவசமிக்கதான தாவரம்தான். வெளிப்படையான காட்சிப் பொருளாக அதனை நாம் பத்திரமாகக் கொண்டுவர இயலாது. தான் மிகவும் மனத்தாழ்மையாய் நடப்பதாயும், தனது எஜமானரை மிகவும் நெருங்கிப் பின்செல்லுகின்றதாயும் வாய் பேசித்திரியும் ஒரு மனிதன் தன்னையே ஏமாற்றிக்கொள்ளுகின்றான் என்பதில் எவ்வித சந்தேகமுமே கிடையாது மனத்தாழ்மை என்பது நாம் நம்மைக் குறித்து இழிவாக எண்ணுவதல்ல, நம்மைப்பற்றி எதுவும் எண்ணாமலிருப்பதுதான்.

தாழ்மையான தேவ கிருபைக்குப் பசும்புல்லை நாம் உதாரணமாகக் கொள்ளுவது பொருத்தமானது என்று ஒருவர் கூறினார். மிகவும் எளிமையான பயனுக்காக அது சிருஷ்டிக்கப்பட்டது. அதை அறுத்துப் போடுங்கள், அது திரும்பவுமாகத் தழைத்து வளரும். கால்நடைகள் அதை மேய்ந்தாலும் அது அழகாகக் காணப்படுகின்றது.

மலைகளின் உச்சியிலும், சிகரங்களிலும் கடுமழை பெய்தாலும், வெகு விரைவில் அவைகள் வறண்டும், வறட்சியாகவும் காட்சி அளிக்கின்றன. ஆனால், அம்மழைத்தண்ணீர் தாழ்வான பள்ளத்தாக்கிற்கும், புல்வெளிகளுக்கும் வழிந்தோடி வருகையில் அவைகளை மிகவும் வளமுடையதாக்கிவிடுகின்றன. ஒரு மனிதன் பெருமைக்காரனாகவும், தன்னை உயர்ந்தவனாகவும் எண்ணிக்கொண்டிருந்தால் தேவ கிருபையின் ஆறுகள் அவன்மேல் பெய்தாலும் சற்று நேரத்திற்குள்ளாக அவனை ஆசீர்வாதமற்ற வறட்சியான நிலையில் மாத்திரமே விட்டுச் செல்லும். ஆனால், மனத்தாழ்மையுள்ளோனின் வாழ்வில் அது மட்டற்ற ஆசீர்வாதங்களைக் கொழித்துவிட்டுச் செல்லும்.

ஒரு மனிதன் அன்புடையவன் போலவும், விசுவாசமுடைய
வன் போலவும், நம்பிக்கையுடையவன் போலவும் இதர தேவ குண
ங்களை அனைத்துமுடையவன் போலவும் நடிக்கலாம். ஆனால்
போலியான மனத்தாழ்மையை நீ உடனே கண்டுபிடித்துக்
கொள்ளலாம்.

என்னுடைய தோட்டத்தில் ஒரு அழகான பேரிக்காய் மரம்
(PEAR TREE) இருந்தது. மற்ற எல்லா மரங்களைக் காட்டிலும்
அது அழகானதோர் மரமாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது.
அதின் ஒவ்வொரு கிளைகளும் மெழுகுவர்த்தியைப்போலக் கம்பீர
மாக வானத்தை நோக்கி வளர்ந்திருந்தது. ஆனால், வியப்புக்குரிய
காரியம் என்னவெனில் நான் அதிலிருந்து ஒருபழம்கூடப் பெற்றுக்
கொள்ளமுடியவில்லை என்பதுதான். எனது தோட்டத்தில் மற்றொரு
பழமரமிருந்தது. கடந்த ஆண்டில் அம்மரம் கிளைகள் முறியத்தக்க
தாக நிரம்பப் பழுத்துக் குலுங்கியிருந்தது. அதின் கிளைகள் யாவும்
பூமியை ஒட்டியே படர்ந்திருந்தன. வாசிப்போனே, நீ எவ்வளவுக்
கெவ்வளவு தேவ சமூகத்தில் உன்னைத் தாழ்த்துவாயோ, அவ்வள
வுக்குத்தக்கதாகத்தானே கர்த்தர் தம்முடைய நாம மகிமைக்காக
உன்னைப் பயன்படுத்துவார்.

வானளாவில் பறந்து திரியும் வானம்பாடிப் பறவையானது
தனது கூட்டைப் பூமியின் மிகவும் தாழ்விடங்களிலேயேதான் கட்டு
கின்றது. காதுக்கினிய மதுரகீதம் எழுப்பும் நைட்டிங்கேல் குருவி
அனைவரும் தூங்குகின்ற இராக்காலத்தின் இருளில்தான் தன்
இனிய குரலை எழுப்பும். பழங்களால் நிறைந்து குலுங்கும் மரக்
கிளைதான் பூமியோடு, பூமியாகத் தாழ்ந்து தலைவணங்கி நிற்கும்.
அதிகமான சரக்குகள் ஏற்றப்பட்டக் கப்பல்தான் சமுத்திரத்தின்
ஆழத்தில் அமிழ்ந்து மறைந்திருக்கும். அவ்வாறே பரிசுத்தமுள்ள
கிறிஸ்தவர்கள் மனத்தாழ்மையுள்ளவர்களாயிருப்பார்கள்.

மனத்தாழ்மையைக் கச்சையாகக் கட்டியிருந்த சில வேத புரு
ஷர்களின் வாழ்க்கைகளை நான் படித்தபோது நான் என்னளவில்
மிகவும் வெட்கப்பட்டுப்போனேன். நீங்கள் உண்மையாகவே என்
னில் அன்புகூருவீர்களானல் கர்த்தர் எனக்கு மனத்தாழ்மையைத்
தரும்படியாக மாத்திரம் ஜெபியுங்கள். வேதாகம புருஷர்களின்
மனத்தாழ்மையான வாழ்க்கைகளுடன் எனது வாழ்க்கையை நான்
ஒப்பிட்டுப் பார்த்தபோது வெட்கம் என்னை மூடினது உங்கள் பரி
சுத்த வாழ்க்கையின் நிலையை நீங்கள் அறியவேண்டுமென்று விரும்
புவீர்களானல் மனத்தாழ்மையாக ஜீவித்த வேதாகம பரிசுத்தவான்
களின் ஜீவியங்களை ஒப்பிட்டுப் பார்த்தலே மிகவும் பயனுடையதா
யிருக்கும்.

வேதாகம புருஷர்களில் மிகுந்த சாந்த சீலன் யோவான்
ஸ்நானன் ஆவார். எருசலேமிலிருந்த யூதர்கள் ஒரு தூது குழுவை

அவரண்டை அனுப்பி நீர் எலியாவா? தீர்க்கத்தரிசியானவரா? என்று கேட்டபொழுது, யோவான் ஸ்நானன் "அல்ல" என்று பதிலுரைத்தார். அவர் தன்னைக் குறித்துப் பிரபல்யமாக "நான் வயதான சகரியா என்னும் ஆசாரியனின் குமாரன். நான் ஒரு சிறந்த பிரசங்கி என்பதான என் புகழ்ச்சியைக் குறித்து நீங்கள் கேள்விப்படவில்லையா? நான் அதிகமான ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கின்றேன். என்னைப்போன்ற பிரசங்கியை உலகம் இதுகாறும் கண்டதில்லை" என்று கூறியிருக்கலாம்.

ஆனால் அவர் "நான் ஒருவனுமில்லை. நான் காணப்படக்கூடியவன் அல்ல, நான் கேட்கப்படக்கூடிய ஒரு சத்தம் மாத்திரமே" என்று பதிலுரைத்தார். தன்னைப்பற்றிக் கூற ஒரு வார்த்தை கூட அவருக்கில்லாதிருந்தது.

இப்படிப்பட்ட யோவானைக் குறித்து ஆண்டவர்தாமே "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை" என்றும் "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்" என்றும் நற்சாட்சி கொடுக்கின்றார். அவனுக்குரியதான கனத்தைக் கிறிஸ்து இரட்சகர் அவனுக்களிக்கின்றார். நீ தாழ்மையின் நிலையைத் தெரிந்து கொள்ளுவாயானால் தேவன் அதைக் கவனிக்கின்றார். அதற்கான கனத்தையும் அவர் உனக்களிப்பார்.

தாவீது ராஜா கோலியாத்தைக் கொன்ற சம்பவத்தைத் தனது சங்கீதங்கள் எதனிலும் குறிப்பிடாததை நான் சமீபத்தில் ஆச்சரியத்துடன் கவனித்தேன். தற்காலத்தில் அவ்விதமான ஒரு நிகழ்ச்சியை மற்றொருவர் நிகழ்த்தியிருப்பாரானால் அதைக் குறித்து ஒரு பெரிய பிரபந்தமே உடனே எழுதப்பட்டிருக்கும். அவர் ஒரு பெரிய பட்டத்தை, அதாவது "கோலியாத் ராட்சதனைக் கொன்றோன்" (GIANT GOLIATH KILLER) என்றதான பட்டத்தைத் தம்முடைய பெயருடன் சேர்த்துக்கொண்டிருப்பார்.

மாபெரும் மிஷனரியான வில்லியம் கேரியைப்பற்றி ஒரு சம்பவம் கூறப்படுகின்றது. ஒருசமயம் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் அவரைத் தம்முடன் விருந்துண்ணும்படியாக அழைத்தார். அந்த விருந்தில் கர்வமுள்ள சில உயர்மட்ட ராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். மிஷனரிகளைத் தரக்குறைவாக மதிக்கும் இழிவான சிந்தை அவர்களுக்கிருந்தபடியால் சாப்பாட்டு மேஜையில் அவர்களில் ஒருவன் வில்லியம் கேரியை அவமானப்படுத்தும்முகமாக அவரைப் பார்த்து

"மிஷனரிப் பணியை மேற்கொள்ளுவதற்கு முன்னர் கேரி செருப்புகள் தைப்பவராக இருந்தார் என்று நான் நினைக்கின்றேன்" என்று கூறினான்.

இதைக்கேட்ட கேரி அவனுக்கு மாறுத்தரமாக "ஓ, அப்படியல்ல, செருப்புகளைத் தைக்கும் 'சக்கிலி' (COBBLER) யாகத்தான் நானிருந்தேன். அதைக்குறித்து நான் வெட்கமடையேன்" என்று கூறினர்.

நமதருமை இரட்சகரின் மகா மேன்மையான தேவசீலங்களில் கீழ்ப்படிதலுக்கு அடுத்ததாகவிருந்தது அவரது மனத்தாழ்மையாகும். அவருடைய கீழ்ப்படிதலும்கூட அவரின் மனத்தாழ்மையிலிருந்துதான் வெளிப்பட்டது. "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானுர். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினர்" (பிலி.2:6–8) ஆண்டவரின் தாழ்மையான பிறப்பு, உலகப்பிரகாரமான அவருடைய பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கி ஜீவித்த அவரது ஜீவியம், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், பாவிகளுடன் இசைந்து வாழ்ந்த அவரது வாழ்க்கை, அனைத்திற்காகவும் தனது பிதாவையே சார்ந்து அவருடையசித்தத்திற்கே முற்றும் தன்னை ஒப்புவித்து வாழ்ந்த வாழ்க்கை அவரது சிலுவை மரணம் போன்றவைகள் யாவும் அவரின் மனத்தாழ்மையைய் பிரகாசித்துக் காண்பிக்கின்றது.

ஒரு சமயம் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று தர்க்கம் பண்ணிய சீஷர்கள், பரிசுத்தாவியால் அபிஷேகிக்கப்பட்ட பின் நாட்களில் ஆச்சரியப்படத்தக்க மாற்றம் அடைகின்ருர்கள். மத்தேயு சுவிசேஷத்தை எழுதிய மத்தேயு என்ற சீஷன் தமது பெயரைத் தம்முடைய சுவிசேஷத்தில் குறிப்பிடவே இல்லை தன்னை ஒரு ஆயக்காரன் என்று அழைத்துக் கொண்டு பேதுரு, அந்திரேயா போன்ற சீடர்கள் செய்த காரியங்களையும், மற்ற சீஷர்கள் தங்களுக்குள்ள அனைத்தையும் விட்டு, விட்டு ஆண்டவரைப் பின்பற்றின விருத்தாந்தங்களைக் குறிப்பிடும் அவர் தமது தியாகம் (லூக். 5:28) தான் செய்த பெரிய விருந்து (லூக். 5:29) போன்றவைகளைக் குறிப்பிடாமல் விட்டுவிடுகின்ருர்.

மாற்கு சுவிசேஷம் பேதுருவின் சம்பாஷணைகளின் சரித்திரமாகப் பேதுருவின் உரிமையிலேயேதான் வெளியிடப்பட்டிருக்க வேண்டிய சுவிசேஷம் என்று ஜெரோம் என்ற பரிசுத்தவான் குறிப்பிடுகின்ருர். மாற்கு சுவிசேஷம் பேதுருவின் சுவிசேஷம் என்றும் அழைக்கப்படுகின்றது. என்றபோதிலும் இந்த சுவிசேஷத்தில் பேதுருவுக்கு இழுக்கு உண்டாகக்கூடிய காரியங்களே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மற்றவர்களை உயர்த்திவிட்டு, விட்டுத் தன்னைத் தாழ்த்தும் காட்சிகளையே இந்த சுவிசேஷத்தில் நாம் காண்கின்ரேம். கடல்மேல் நடந்த அவரது வீரதீரச் செயலின் ஒரு வாசகம்

கூட நமக்கு இங்கு கிடைப்பதில்லை. அவரின் பெயருக்கு மேன்மை யூட்டக்கூடிய எந்த ஒரு குறிப்புகளையும் இந்த சுவிசேஷத்தில் நாம் காண்பதில்லை. அதற்குப் பதிலாக அவரின் ஆவிக்குரிய வீழ்ச்சி, இயேசுவை மறுதலிக்கும் அவருடைய கோழைத்தனம் போன்றவைகள் முழு விபரமாகச் சித்தரித்துக் காட்டப்பட்டிக் கின்றன.

லூக்கா சுவிசேஷம் போன்ற ஒன்று இந்த நாட்களில் எழு தப்படுமானால் எப்படியிருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? டாக்டர் லூக்கா என்ற அவரது கையொப்பத்துடன் முன் அட்டை யில் அவரது பெரிய புகைப்படம் பளிச்சிட்டு மின்னிக்கொண்டிருக் கும்! ஆனால் என்ன ஆச்சரியம்! இரு புத்தகங்களை எழுதிய லூக்கா வின் பெயரை இரண்டு புத்தகங்களிலுமே நாம் காணமுடிவதில்லை.

யோவான் "இயேசுவுக்கு அன்பான சீஷன்" என்ற பெயரில் தன்னை மூடி மறைத்துக்கொள்ளுவதைக் காண்கின்றோம். சுவிசே ஷங்களின் நான்கு ஆக்கியோன்களும் தங்கள் பெயர்களை வெளிக் காட்டித் தங்கள் உரிமைகளை நிலைநாட்டவில்லை.

அன்பானவனே, இவ்விதமான தேவ ஆவியைப் பெற்று நம்மை மறைத்துக்கொள்ளுதல் எத்தனை ஆசீர்வாதமானது. தேவன்தாமே அவ்வண்ணமாகக் கிறிஸ்துவின் ஆவியால் நம்மை நிரப்புவதன்மூலமாக சாந்தம், மனத்தாழ்மையை நாம் அணிகலன் களாகக் கொள்ளுவோமாக!

Oh to be nothing, nothing!
Only to lie at His feet,
A broken and emptied vessel,
For the Master's use made meet.
Emptied, that He might fill me
As forth to His service I go;
Broken, that so unhindered,
His life through me might flow.

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந் திர வெளியீடு. இது எந்த ஒரு சபைப் பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 5 மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:-

DEVA EKKALAM,
Kotagiri P. O. - 643 217,
Nilgiris, S. India.

யாரை நான் அனுப்புவேன்? யார் என் காரியமாய்ப் போவான்?

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.



மேற்கு தீபெத்தை "உடைந்த சந்திர மண்டல நாடு" (Broken Moon Land) என்றழைக்கின்றனர். காரணம் என்னவெனில் அந்த மேற்கு தீபெத்தின் பூகர்ப்ப அமைப்பு அத்தனை அழகுப் பொலிவுடன் அமைந்திருப்பது தான். மேற்கு தீபெத்தின் பனி மலைக் காட்சிகளையும், பல நிறங்களில் தோற்றமளிக்கும் அதின் உயர் பீடபூமிகளையும் மனித வார்த்தைகளால் அத்தனை எளிதாக வர்ணித்துவிட முடியாது. வானமும், பூமியும் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருக்கும் உலகத்தின் கூரையாக அது காட்சி அளிக்கின்றது.

மேற்கு தீபெத் அதின் நதிகளின் போக்கின்படி ஐந்து பிரிவாக அமைந்துள்ளது. முதலாவது சுரு பள்ளத்தாக்கு, இரண்டாவது ஸன்ஸ்கார் பள்ளத்தாக்கு, மூன்ருவது சிந்து பள்ளத்தாக்கு, நான்காவது நுப்ரா பள்ளத்தாக்கு, ஐந்தாவது ட்ராஸ் பள்ளத்தாக்கு. இப்பீடபூமியின் ஜனத்தொகை ஒரு லட்சம் மக்கள் மாத்திரம்தான். இதன் பரப்பளவோ 36,000 சதுர மைல்களாகும்.

இந்நாட்டின் சீதோஷ்ணம் மிகக் கொடூரமானது. ஆனால் இப்பூமியின் மக்கள் மிகவும் அன்புள்ளம் கொண்டவர்கள். இங்குள்ள மக்கள் மழைக்காகக் கடவுளை நோக்கி மன்ருடாமல் கடும் வெயிலுக்காகத்தான் வேண்டுவார்களாம். இது நமக்கு ஒருவேளை வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனால் வெயில் அதிகமானல் அருகிலுள்ள நித்திய பனிமலைகள் உருகி ஆறுகளாக ஓடிவந்து தங்கள்

யல்களைச் செழிப்பாக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். மேற்கு தீபெத்தில் கடுங்குளிர் உண்டு. அடிக்கடி பூஜ்யத்திற்கும் கீழாகக்கூட சீதோஷ்ண அளவு சென்றுவிடுவதுண்டு என்று கூறுகின்றனர்கள். இங்கு நிலவும் தாங்கமுடியாத குளிரினின்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மக்கள் முழுமையான ஆட்டுத்தோலை ரோமத்துடன் அப்படியே போர்த்தியிருக்கின்றனர்.

சஹாரா பாலைவனத்தின் வெப்பமும், சைபீரியாவின் குளிரும் இங்கிருப்பதாகக் கூறப்படுகின்றது. “பின்லாந்து (FINLAND) தேசத்தின் குளிரையும், ஆப்பிரிக்காவின் கொடிய வெப்பத்தையும், ஜப்பான் தேசத்தின் உபசரிப்பையும், தீபெத் நாட்டின் மாயா ஜாலத்தையும், ஈரான் தேசத்தின் கடவுள் பற்றையும் நீ இந்த மேற்கு தீபெத்தில் கண்டுகொள்ளலாம்” என்கின்றனர்.

மக்கள்.

இந்த பூமியின் மக்கள் உண்மையும், நற்சுபாவமும், சந்தோஷமும், சிநேகபாவமும் உடையவர்கள். கடின உழைப்பும், நேர்மையும் இவர்களிடமுள்ளது. இம்மக்கள் அபூர்வமாகவே கோபம் கொள்ளுவார்கள், கோபம் கொண்டாலும் உடனே நல்மனம் பொருந்தும் பண்புடையவர்கள் என்று விளங்குகின்றது. திருட்டும், கொலையும் இந்த மேற்கு தீபெத்தில் அநேகமாக நடப்பதேயில்லையாம்.

பெண்கள் மிகவும் செளந்தர்யமுடையவர்கள், கள்ளங்கபடற்றவர்கள், நற்குணம், இரக்கம், எளிமை, சூதுவாதற்ற திறந்த உள்ளமுடைய மக்கள்.

மேற்கு தீபெத்தில் ‘ஒரே காலத்தில் பல கணவர்களை மணக்கும்பழக்கம்’ (POLYANDRY) உள்ளது. மூத்த அண்ணன் மணம் புரியும் பெண்ணை அவனது உடன் பிறந்த இளைய சகோதரர்கள் அத்தனை பேரும் மனைவியாகக் கொள்ளுகின்றனர். யாருக்கு யார் பிறந்தாலும் பிறக்கும் பிள்ளைகள் அனைவரும் மூத்த அண்ணனின் பிள்ளைகளாகக் கருதப்படுகின்றார்கள். இந்த தீய பழக்கம் காரணமாக மக்கள் பெருக்கம் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் இவ்விடத்தில் மிகக் குறைவாக உள்ளது. மேற்கு தீபெத்திய கணவன், மனைவி இருவரை இங்குள்ள படத்தில் நாம் பார்க்கலாம்.

வீடுகள்.

வீடுகள் சுடப்படாத பெரிய வெள்ளைச் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. வீடுகள் யாவும் தட்டையானதும், சிறிய சாளரங்கள் (WINDOWS) பொருத்தப்பட்டவைகளுமாயுள்ளன.

தங்கள் வீடுகளை உயரமும், செங்குத்துமான மலைமுகடுகளில் கட்டுவது தீபெத்தியர்களின் அலாதியான ஆவலாகும். மேற்கு

தீபெத்தின் தலைநகர் 'லே' பட்டணத்தின் உயர்ந்த மலைஉச்சியில் அக்காலத்திய அரச அரண்மனையும், புத்த மடாலயமும் கட்டப்பட்டுள்ளது. இந்த அரண்மனையின் நீளம் 250 அடிகளாகும். ஏழு மாடிக் கட்டிட உயரமுடையது. இங்குள்ள பக்கத்திலுள்ள படத்தில் 'லே' பட்டணத்தையும், அதின் உச்சியில் அமைந்துள்ள அரண்மனை, புத்த மடாலயம் போன்றவற்றை நாம் காணலாம். வீட்டின் தட்டையான மேல் மாடியிலும் மக்கள் வாழ்கின்றனர். வீடுகள் பார்ப்பதற்குப் பலஸ்தீன தேசத்து வீடுகளைப் போலிருக்

கின்றன. கால்நடைகள் (CATTLE) இங்கு அதிகமாக இல்லாத காரணத்தால் மனிதனின் மலம் (NIGHT SOIL) சேமிக்கப்பட்டு எருவாகப் பயன்படுத்தப்படுகின்றது. அநேகமாக ஒவ்வொரு வீட்டிற்கு அருகிலும் ஒரு இடத்தில் மனித மலம் சேமிக்கப்படுவதால் தெருவில் செல்லுகையில் ஆங்காங்கு துர்க்கந்தம் வீசுகின்றது.

விளைபொருட்கள்.

மேற்கு தீபெத்தில் அநேக இடங்களில் ஆப்பிள், பிளம், ஆப்ரிகாட், வால்நட் போன்றவைகள் பயிரிடப்படுகின்றன. கோதுமையும். பார்லியும் எல்லா இடங்களிலும் உள்ளன. ஒருதலைப்பட்சமான சீதோஷ்ண நிலை காரணமாக 16 சதவீத நிலம் மட்டுமே இங்கு சாகுபடி செய்யப்படுகின்றது. உருளைக்கிழங்கு, முள்ளங்கி, முட்டைக்கோஸ் போன்ற காய்கறிப்பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

புத்த மடாலயங்கள்.

இந்த மேற்கு தீபெத்தில் நாம் அநேக புத்த லாமாக்களைக் காணலாம் தீபெத் நாட்டிலிருந்து சீனப்படையெடுப்பால் ஓடிவந்தவர்களும்கூட இவர்களிலுண்டு. தேவனுடைய சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒரு தீய நிலை இம்மக்களில் சிலருக்கு இருப்பதைக் காண முடிந்தது.

இந்தப் பிடபூமியில் புத்தமடாலயங்கள் அநேகம் உள்ளன. அவற்றில் இரண்டை நாங்கள் 'லே' பட்டணத்தில் காணமுடிந்தது. மடாலயத்தின் சுவர்களெல்லாம் கூரை முதல் அனைத்துப் பகுதிகளிலும் புத்தரின் பல்வேறு வாழ்க்கைச் சாயலைக் குறித்த சித்திரங்களும், நீண்ட நாவை நீட்டிக்கொண்டு, கண்களை அகலத் திறந்து நம்மைப் பயமுறுத்தும் பாவனையில் கணக்கற்ற பூதங்களின் படங்களும் வரையப்பட்டிருக்கின்றன. இந்தச் செய்தியின் முகப்பில் காணப்படும் நீண்ட குழல்களை ஊதும் லாமாக்களை நாம் இந்த மடாலயங்களில் காணலாம். குழல்களை ஊதி, மிகப்பெரிய கொட்டுகளை முழக்கி, லாமாக்கள் நடத்தும் புத்தமதத் தொழுகைகளைப் பார்க்கையில் சற்று அச்சம் நமக்கு எழும்பத்தான் செய்கின்றது. கர்த்தர்தான் இம்மக்களின் அறியாமை இருளைப்போக்கி ஜீவனுள்ள தேவனாகிய தம்மைக் காணும் ஞானக்கண்களை அருள நாம் ஜெபிப்போம்.

மேற்கு தீபெத் ஒரு காலத்தில் தீபெத் நாட்டின் நேரடி ஆட்சி நிர்வாகத்தில் இருந்ததாம். இவ்விடத்திற்கான பிரதம லாமாவை நியமனம் செய்வதும் தீபெத்திய தலாய் லாமாதானாம். அந்நாட்களில் ஆட்சி நிர்வாகம் மிகவும் கண்டிப்பாக இருந்திருக்கின்றது.

சண்டையில் ஒருவன் மற்றொருவனைக் கொன்றுவிட்டால் கொலை செய்தவன் கொலை செய்யப்பட்டவனுடைய சடலத்துடன்

இணைத்து இறுகக் கட்டப்பட்டு வைக்கப்படுவான். 24 மணி நேரத்திற்குப் பின்னர் கட்டப்பட்ட நிலையிலேயே ஆற்றில் வீசப்படுவான்.

மரண தண்டனை இருவிதங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஒன்று கொலைபாதகனின் கால் கரங்களைக் கட்டிக் கழுத்தில் ஒரு பெரிய பாராங்கல்லை இணைத்து நதியில் ஆழ்த்துவது, மற்றொன்று சிலுவை மரணம். சிலுவை மரணத்தில் கொலைஞனின் வஸ்திரங்களை அகற்றி நிர்வாண கோலத்தில் கால் கரங்களைச் சிலுவையுடன் கயிறுகளால் இறுகக் கட்டிவிட்டு, அவனது தலைமயிரிலேயே அவனது தலை நிமிர்ந்து நேராயிருக்கும்படி முடிச்சிட்டுக் கட்டிவிடுவார்களாம். பின்னர், கொதிக்கும் எண்ணையை அவன் மேல் ஊற்றி சித்திரவதை செய்து கொல்லுவார்களாம் அல்லது கொடிய வெயில், கடுங்குளிர் போன்றவற்றில் தாளுகவே கொஞ்சம், கொஞ்சமாக அழுந்தி சாகும்படியாகச் சிலுவையை ஊருக்கு வெளியே ஓரிடத்தில் நிறுத்திவிடுவார்களாம்.

மேற்குறிப்பிட்ட இரண்டு முறையான மரண தண்டனைகளிலும் இரத்தம் சிந்துவதைத் தவிர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். பௌத்த மத நீதியின்படி மனித இரத்தம் பூமியில் சிந்தப்படக் கூடாது என்ற காரணத்திற்காகவே சிலுவைக் கைதியை ஆணி அடித்துக் கொல்லாமல் வேறு விதங்களில் கொன்றிருக்கின்றார்கள்.

அந்நிய மார்க்கத்தைப் பரப்புவோருக்கு அந்நாட்களில் மரண தண்டனை கொடுக்கப்பட்டதாம். இப்படிப்பட்டவர்களின் கால் கரங்கள் கட்டப்பட்டுக் கழுத்தில் ஒரு பெரிய கல்லைக் கட்டிச் சிந்து நதியில் வீசிக் கொன்றிருக்கின்றார்கள்.

சுவிசேஷத்தை மேற்கு தீபெத்தில் பரப்பிய சாது கந்தையானந் ஐயாவுக்கும், எனக்கும் பௌத்த மத நீதியின்படி மேற்குறிப்பிட்ட தண்டனைதான் பொருத்தமாகும்.

அந்தப் பண்டைய நாட்கள் எல்லாம் இன்று கடந்து சென்று விட்டன. கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

இன்று நாம் மேற்கு தீபெத்தில் சாதாரணமாக, சுயாதீனமாக எங்கும் சுற்றியலைந்து தேவனது அன்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கலாம். எங்கெங்கு சென்றாலும் மக்கள் தாகத்தோடும், தவனத்தோடும் சுவிசேஷத்தை ஆவலுடன் ஏற்றுக்கொள்ளுவதை நாம் காணலாம்.

"........இதோ வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்". (யோவா. 4:35)

அறுவடை மிகுந்த இடம். அறுப்புக்கு ஆட்கள்தான் இல்லை. மேற்கு தீபெத்தைப் போன்று சுவிசேஷத்திற்காக ஆவலாக ஏங்கி

ற்கும் ஒரு மாநிலத்தை இந்தியாவில் நாம் வேறெங்கும் காண முடியாது.

இந்த புத்தர்களின் நாட்டில் நாம் செய்யவேண்டிய தேவப் பணிகள் எவ்வளவோ உண்டு. இதை வாசிக்கும் உங்கள் உள்ளத்தில் கர்த்தர் பேசுவாரானால் நீங்களே இப்பரிசுத்த தேவப்பணியில் கட்டாயம் ஈடுபடுங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். மேற்கு தீபெத்திற்குச் செல்ல ஏற்ற மாதங்கள் ஜூன் மாதத்திலிருந்து அக்டோபர் வரை மட்டுமேதான். மிகுந்த ஆபத்து நிறைந்த பஸ் மார்க்கமாகச் செல்ல நீங்கள் விரும்பாவிட்டால் காஷ்மீரத்திலிருந்து விமானத்தில் செல்லலாம். போய்த் திரும்ப விமானக் கட்டணம் ரூ. 1000/- செல்லும். டில்லியிலிருந்தே விமானப் போக்குவரத்து சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளதாகப் பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன. பணம் அதிகமாகத் தேவைப்படும். ஊக்கமாக ஜெபித்துக் கர்த்தாவின் வழிநடத்துதலின்படி செயல்படுங்கள். இவ்விதமான ஊழியங்களில் போந்த கஷ்டங்கள் உண்டு.

எல்லாவற்றிற்கும்மேலாக மேற்கு தீபெத்திலுள்ள சிறிய மோரேவியா திருச்சபையில் ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகவும் அதன்மூலமாகத் தேவனது சுவிசேஷம் அப்பிடபூமியில் பரவவும் நாம் பாரத்தோடு ஜெபிக்கவேண்டும்.

மேற்கு தீபெத் (லடாக்) சுவிசேஷ ஊழியச் செய்திகள்

கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்திற்கே ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென்.



அருமை நேசஇரட்சகர் இயேசுதாமே தம்முடைய திட்டமான வெளிப்பாட்டைக் கொடுத்துத் தமது ஊழியத்திற்காக மேற்கு தீபெத்தினுக்குள் என்னை அழைத்துக்கொண்டு சென்றிருந்தமையால் ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியையும் அவர் அபரிதமாக ஆசீர்வதித்தார். கர்த்தாவின் திட்டமான ஆலோசனை ஊழியத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தவறாமல் கிடைத்தது.

ஒருநாள் வழக்கம்போல அன்றைய ஊழியத்திற்குத் தேவையான கைப்பிரதிகளை தோள்பையினுள் எடுத்து வைத்துக்கொண்டு ஊழியத்திற்குச் செல்ல ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தேன். உருது மொழி வேதாகமம் ஒன்றையும் சேர்த்து எடுத்துக்கொள்ளும்படிக் கர்த்தர் என் உள்ளத்தில் மிகவும் அதிகமாக உணர்த்தினபடியால் ஒரு உருதுமொழி வேதபுத்தகத்தையும் எடுத்துக்கொண்டேன். அந்த நாளில் மேற்கு தீபெத்தின் 'லே' பட்டணத்திலுள்ள புத்தகசாலைக்குச் செல்லும்படிக் கர்த்தர் என் உள்ளத்தில் ஏவினபடியால் அங்கு நான் சென்றிருந்தேன். பெரிய புத்தகசாலையான அதில் அபூர்வமான பண்டைய புத்தகங்களும் உள்ளன. நான் வாசித்துக்கொண்டிருந்த மேஜைக்கு அருகில் ஒரு வாலிபனும் புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். அவன் எப்பொழுதும் என்னையே கவனித்துக்கொண்டிருந்தான் இது எனக்கு மிகவும் வியப்பை அளித்தது. நான் புத்தகசாலையைவிட்டு வெளியேறுகையில் அவனும் என்னைப் பின்தொடர்ந்தான். நான் எங்கிருந்து வந்திருக்கின்றேன் என்ற விபரங்களையெல்லாம் கேட்டு விசாரித்ததன் பின்னர் என்னைத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு அவன் என்னை அன்புடன் உபசரித்து மிக இனிமையான ஆப்ரிகாட் பழங்களை எனக்களித்தான். M. Sc., (Agri) பட்டதாரியான அவன் சமாதானத்தை வாழ்க்கையில் தேடிக்கொண்டிருப்பதாக என்னிடம் கூறினான். அவனது அறை முழுவதும் பல நூற்றுக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு வாங்கியதான புத்தகங்களால் நிறைந்து கிடந்தன. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் கிடைத்த இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கிறிஸ்து பெருமானைப்பற்றியும், அவர் மூலமாக மாத்திரம் உள்ளதான விலையேறப்பெற்ற இரட்சிப்பைக் குறித்தும், அவர் மாத்திரமே மனிதனுக்கு நிலையான சமாதானத்தை அளிக்கக்கூடியவர் என்றும் வெகு திட்டமாகக் கூறினேன். எனது தாழ்மையான அநுபவ சாட்சியையும் தேவ நாம மகிமைக்காக அவனுடன் பகிர்ந்து கொண்டேன். அவன் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. தனக்கு ஒரு உருதுமொழி வேதாகமம் தரும்படியாக என்னிடத்தில் கேட்டான். தேவ ஏவுதலின்படி நான் என்னுடன் கொண்டு சென்றிருந்த உருதுமொழி வேதாகமத்தை அவனுக்குக் கொடுத்தபோது அவன் மிகவும் மகிழ்வுற்று அதனை முத்தமிட்டுப் பெற்றுக்கொண்டான். காஷ்மீரின் ஜம்மு பட்டணத்தைச் சேர்ந்த இவ்வாலிபனின்

பெயர் K. C. பகத் என்பதாகும். இந்த ஆத்துமாவை ஆண்டவர் எப்படியும் கட்டாயம் சந்திப்பார் என்ற பரிபூரண விசுவாசம் எனக்குண்டு. இந்த வாலிபனை நீங்களும் உங்கள் ஜெபங்களில் தயவு செய்து நினைத்துக்கொள்ளுங்கள். லே பட்டணத்தில் ஒரு விவசாய அதிகாரியாக அவன் பணியாற்றிக்கொண்டிருக்கின்றான்.

லே பட்டணத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் கர்த்தருடைய சுவிசேஷப் பணியை நாங்கள் முடித்து கொண்டதன் பின்னர் பட்டணத்தைத் தாக்கும் பணியில் ஈடுபட்டோம். பட்டணத்தின் ஒவ்வொரு சந்து சந்தாக நுழைந்து தீபெத் மொழிப் பிரசுரங்களையும், உருதுமொழிப் பிரசுரங்களையும் ஜெபத்துடன் விநியோகித்தோம். சாது ஐயா இந்தப் பணியில் வெகு தீவிரமாக ஈடுபட்டார்கள். இலவசமாகக் கொடாமல் அவற்றைக் கட்டாயம் படிக்கத்தக்கதாகச் சிறிய விலைக்கே அவர்கள் கொடுத்தார்கள்

லே பட்டணத்தில் நாம் பார்ப்போமானால் சீனர்களால் துரத்தப்பட்டத் தீபெத்திய அகதிகள் அநேகரை நாம் காணலாம். தீபெத்திலிருந்து தப்பிவந்த இம்மக்கள் தங்களுடன் நிறைய தீபெத் நாட்டின் பற்பலவிதமான விலையுயர்ந்த கற்கள், பவளங்கள், விசித்திர வேலைப்பாடுகள் கொண்ட வெண்கல பாத்திரங்கள், கரண்டிகள், நூதனமான இசை எழுப்பும் குழல்கள் (மனிதனின் தொடை எலும்பால் செய்யப்பட்டவைகளும் இதிலுண்டு) தீபெத்திய நாணயங்கள், பூ வேலைப்பாடுகள் கொண்ட படுதாக்கள் போன்றவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டுவந்து இங்கு வியாபாரம் செய்கின்றனர்.

இவ்விதமான வியாபாரம் செய்யும் மக்கள் அநேகர் இங்குண்டு. இந்த மக்களுக்கெல்லாம் தேவனின் வார்த்தைகளடங்கிய புத்தகங்களை அளித்தோம்.

சில தீபெத்திய வியாபாரிகள் புத்தகங்களை வாங்கிக்கொண்டு அதற்கு விலைக்கிரயமாக பவளம் போன்றவற்றைக் கொடுத்தனர். அவற்றையும் நாங்கள் பெற்றுக்கொண்டோம். எப்படியாவது மக்கள் ஒவ்வொருவருடைய கரங்களிலும் தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தியைக் கொடுத்து அவர்கள் எவ்விதத்திலும் அவற்றை வாசிக்கும்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதே எங்கள் இதயத்தின் கதறுதலாயிருந்தது.

லே பட்டணத்தின் பெரிய நீதிபதியையும்கூடச் சாது ஐயா அவர்கள் தனித்துச் சென்று சந்தித்து ஒரு உருதுமொழி வேதாகமத்தை அவருக்களித்துவிட்டார்கள். மட்டற்ற மகிழ்ச்சியடைந்த அந்த நீதிபதி, சாது ஐயா அவர்கள் காஷ்மீர் திரும்பிச் செல்லுவதற்கான பயண ஏற்பாடுகளைத் தானே ஏற்றுக்கொள்ளுவதாக வாக்களித்து அப்படியே லே பட்டணத்திலிருந்து காஷ்மீருக்கு ஒரு பைசாகூடச் செலவுமின்றி அவர்களை அனுப்பிவைத்தார். மற்றபடி

ரூ. 50/- பஸ் கட்டணம் கொடுத்திருக்க வேண்டும். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

காஷ்மீர் செல்லுவதற்கான எங்கள் நாட்கள் நெருங்க, நெருங்க நாங்கள் வெகு தைரியமாகச் சுவிசேஷப் பணிகளில் ஈடுபட்டோம்.

பட்டணத்திற்கு மேலாக மலையின் மிகவும் செங்குத்தான உச்சியில் ஒரு புத்தமதக் கோயில் உள்ளது இதனை கோம்பா (GOMPA) என்றழைக்கின்றனர். வானத்தைத் தொட்டுக் கொண்டிருக்கின்றாற்போல் அமைந்துள்ள இந்தக் கோயிலினுள்ளும் யாராவது ஒரு லாமா உள்ளிருந்து ஜெபமந்திர சக்கரத்தைச் சுற்றிக்கொண்டிருப்பான், அவனுக்கும் சுவிசேஷத்தை எப்படியாவது அளித்துவிட வேண்டும் என்ற ஆவலில் ஒருநாள் காலையிலேயே ஜெபத்துடன் மலையேறத் தொடங்கினோம். எனது வாழ்வில் இதைப்போலொத்த செங்குத்து மலையை நான் இதுவரை ஏறியது கிடையாது பிராண வாயு குறைவான இடமாகையால் மூச்சு மிகவும் திணறிற்று. சுற்றிச், சுற்றி ஏறிக்கொண்டிருந்தோம். சற்று கால் தவறினால் அதோகதியாகிவிடக்கூடிய செங்குத்துப் பாதை அது. இறுதியாக மத்தியானம் கோயிலை வந்தடைந்தோம். எப்படித்தான் அதனைக் கட்டினார்களோ தெரியவில்லை. கட்டுமான வேலையில் அநேகர் விழுந்து மடிந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. அந்த உயரமான இடத்தில் நிற்பதற்கே பயமாக இருக்கின்றது. கால்கள் நம்மை அறியாமலே நடுங்குகின்றன. அந்தக் கோயிலின் கோபுரத்திலும் எண்ணற்ற புத்தமதக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. நாங்கள் சென்ற சமயம் கோயிலின் கதவு பெரிய இரும்புப் பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. அந்தக் கோயிலின் நுழைவாயிலுக்கருகில் நாங்கள் கொண்டு சென்ற தீபெத் மொழி சுவிசேஷப் பங்குகள், துண்டுப்பிரதிகள் போன்றவற்றில் சிலவற்றைப் பத்திரமாக வைத்து அதற்குமேல் ஒரு கல்லைப் பாரத்திற்காக வைத்துவிட்டு ஜெபத்துடன் திரும்பினோம். எப்படியாவது அவற்றைத் தேவன் பயன்படுத்துவார் என்பதை நாங்கள் அறிவோம்.

ஒருநாள் நாங்கள் இருவரும் பட்டணத்திலுள்ள புத்தகசாலைக்குச்சென்று மிகவும் இரகசியமாக மேஜைகளின்மேல் கிடந்த சஞ்சிகைகள் (PERIODICALS) ஒவ்வொன்றிற்குள்ளும் தீபெத்திய, உருது மொழித் துண்டுப் பிரதிகளை வைத்துவிட்டுக் கடந்து வந்தோம்.

எங்கள் நடபடிகள் இறுதியாக வெளிக்கு வந்துவிட்டது. மக்கள் எங்களைப் புரிந்துகொண்டுவிட்டார்கள். ஒருநாள் மாலைப்பொழுது எனது தோள்பை நிறைய தீபெத் மொழி சுவிசேஷப்பிரதிகள், புத்தகங்களை எடுத்துக்கொண்டு பட்டணத்தின் தெரு வழியாகச் சென்றுகொண்டிருந்தேன். திடீரென ஒரு சிறுகூட்டம் தீபெத்

திய வாலிபப் பெண்கள் என்னைச் சுற்றி வளைந்துகொண்டனர். கிறிஸ்தவப் புத்தகங்களைத் தங்களுக்குத் தரும்படியாகக் கேட்ட னர். அனைவருக்கும் கொடுத்தேன். அளவற்ற மகிழ்ச்சியுடன் பெற் றுப் படித்துக்கொண்டே சென்றனர். பெண் பிள்ளைகள் என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்து பட்டணத்தின் இன் னும் அநேக புத்த மக்களும் என்னிடம் கூடிவிட்டனர். சற்று நேரத்திற்குள்ளாகப் பை காலியாயிற்று. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஒருநாள் ஒரு கிராமத்தில் இரு தீபெத்திய பெண்களுக்கு தீபெத்மொழிச் சுவிசேஷப் பிரதிகளைக் கொடுத்தேன். அதை வாங் கிப் படித்த அவர்கள் "நாங்கள் கிறிஸ்தவர்களாக விரும்புகின் றோம்" என்று மனமகிழ்ச்சியுடன் கூறினார்கள். "உங்கள் புத்த மார்க்கத்தைவிட்டுக் கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவிக்கொள்ள உண்மையாய் ஆசைப்படுகின்றீர்களா?" என்று நான் அவர்களி டம் திருப்பிக் கேட்டேன். "புத்த மார்க்கத்தை நாங்கள் விரும்ப வில்லை" என்று அவர்கள் அளித்த பதில் என் இதயத்தைத் தொட் டது. தொடர்ந்து நான் அவர்களுடன் சம்பாஷிக்க ஆரம்பிக்கை யில்தானே ஒரு ராணுவ வண்டி வந்தது. அதில் அவர்கள் ஏறிச் செல்ல வேண்டியதாயிற்று. இவ்விதமான தவனமுள்ள ஆத்துமாக் களால் மேற்கு தீபெத் நிறைந்து கிடக்கின்றது.

கிராமங்களில் நாங்கள் அநேக தீபெத்திய அகதிகளையும் கண் டோம். தங்களுடைய சொந்த நாடான தீபெத்திற்கு எப்பொழுது செல்லலாம் என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர். தாங் கள் தங்கியிருக்கிறதான தங்கள் சிறிய வீடுகளில் தங்கள் கடவுள் அரசர் தலாய் லாமாவின் படத்தையும், தீபெத்தின் தலைநகர் லாஸா வின் படத்தையும்வைத்து வணங்கித் தங்கள் தாய்நாட்டைக் காணக் கண்ணீரோடு எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கின்ற னர். அவர்களுடைய எதிர்பார்ப்பு என் உள்ளத்தை ஆழமாய்த் தொட்டது. ஒரு அகதியிடம் அவனது சொந்த நாடான தீபெத் தைக்குறித்து நான் பேசினபோது அவனுடைய கண்களில் கண் ணீர் பெருகிற்று. பரலோக இன்ப நாடாம் மோட்சத்தையும், அதின் நாயகராம் நம் அருமை நேசர் இயேசுவையும் நாம் காணத் தவிப்பதைப் போலவேதான் அவர்கள் தவிப்பும், ஏக்கமும் அமைந் துள்ளது.

திரேகமதின் இன்ப சுகம் தேட நேரமில்லையே
சொந்த நாட்டில் தெய்வ முகம் காண்பதே என் வாஞ்சையாம்.
ஸ்தலம் ஹா மகா விசேஷம் பலன் என்ன மதுரம்
வேண்டாமே இப்பூவுலகம் அல்லவே என் நகரம்.

என்ற பக்தனின் பாடலையே அவ்வேளையில் நினைவுகூர்ந்தேன்.

இவ்வித அகதிகள் மத்தியில் நாங்கள் அதிகமாக ஊழியஞ் செய்தோம். அநேக தீபெத்திய வாலிபர்களுக்குத் தனித்தனியாக

வும் இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கூறினோம். இவர்களில் யாங் டேப் ஷெரிங், டென்சிங் ஷெர்பா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த வாஞ்சையான ஆத்துமாக்களுக்காக மறவாது அன்புடன் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மேற்கு தீபெத் நமது இந்திய ராணுவத்தின் கேந்திரமாகவிருப்பதால் பல்வேறு மாநிலங்களிலுள்ள அநேக ராணுவ வீரர்களைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களுக்கும் கர்த்தரைப்பற்றிக் கூறினோம். அநேக சுவிசேஷப் பிரதிகளையும் அவர்களுக்கு விநியோகித்தோம்.

ஒவ்வொருநாளும் பலமணி நேரங்களை ஊழியத்திற்குச் செல்லுவதற்கு முன்னால் ஆண்டவர் சமூகத்தில் ஜெபத்தில் செலவிட்ட பின்னரே கர்த்தரின் திட்டமான வழிநடத்துதலோடு கடந்து சென்றோம். ஊழியம் செய்துவிட்டு வந்தபின்னரும் கர்த்தர் ஊழியங்களை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபித்தோம்.

சாது ஐயா, தனது விருத்தாப்பிய வயதின் பெலவீனம் காரணமாக சிலதினங்கள் முன்கூட்டியே காஷ்மீர் சென்று எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். நான் மேலும் ஒருவாரம் தங்கி கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தேன். ஒருநாள் தெருவில் நான் கைப்பிரதிகளை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த போது ஒரு வாலிபன் மூர்க்கத்துடன் வந்து என்னைத் தடுத்தான், என்னைத் திட்டினான். நான் அதைச் சட்டை செய்யாமல் என் பணியைச் செய்தேன். அந்தநாளில் அவ்விதமானதோர் போராட்டம் வருமென்று முந்தின நாள் இரவே சொப்பனத்தில் தேவன் எனக்கு வெளிப்படுத்தியிருந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சில லாமாக்களை எவ்வளவோ அன்புடன் வற்புறுத்தியும் தேவனுடைய சுவிசேஷப் பிரதிகளை இறுதிவரை வாங்க மறுத்தே விட்டார்கள். ஆனால் அன்புள்ள லாமாக்கள் பலர் மனமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டதுண்டு.

மகாத்துமா சாது சுந்தர்சிங் அவர்கள் தீபெத் நாட்டிற்குமட்டும் அடிக்கடிச் சென்று சுவிசேஷத்தை அந்த மக்களுக்கு அளித்தன் தாற்பரியத்தை நான் நன்கு புரிந்துகொண்டுவிட்டேன். 1929-ம் ஆண்டு தீபெத் சென்ற அவர் மீண்டுமாகத் திரும்பவேயில்லை. தீபெத்திய மண்ணுக்காகவே சுவிசேஷத்தினிமித்தம் அந்தப் பரிசுத்தவான் எருவாகிவிட்டார். மிகவும் சுவிசேஷத் தேவை நிறைந்த நாடு அது.

நான் மேற்கு தீபெத்தைவிட்டுப் பிரியும் இறுதிநாள் வந்தது. முந்தினநாள் சாயங்காலம் பட்டணத்தின் உயர்ந்த புத்த ஞாபகச் சின்னம் அருகில்போய் அமர்ந்தேன். லே பட்டணத்திலுள்ள மக்கள் மாலைப்பொழுதில் அங்கு வருவது வழக்கம். அவ்விடத்திலும்

நாங்கள் ஊழியம் செய்திருக்கின்றோம். அன்று நான் எனக்கு முன் பாகவிருந்த நித்திய பனிமலைகளையும், 'திரிசூலம்' என்ற பனிச் சிகரங்களையும், பின்னுலுள்ள லே பட்டணத்தையும் பல தடவைகள் கண்டுணேக்கினேன். எனக்கருகாமையில் பள்ளியில் பயிலும் சில புத்தச் சிறுவர்களும், முஸ்லீம் சிறுவர்களும் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுக்கு நான் சுவிசேஷத் துண்டுப் பிரதிகளை அளித்திருந்தமையால் என்மீது அவர்களுக்கு அளவற்ற பிரியம் உண்டாயிற்று. தினமும் மாலையில் என்னைச் சந்தித்துவிடுவார்கள். நானும் அவர்களுக்கு நற்புத்திகூறி இயேசுவைப்பற்றியும் சொல்லுவேன். அடுத்தநாள் காலையில் நான் புறப்படவிருப்பதை அறிந்த அவர்கள் "நீங்கள் இனி எங்கள் இடத்திற்கு ஒருபோதும் வரமாட்டீர்களோ?" என்று சோகத்துடன் கேட்ட கேள்வியை என் இதயத்தால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் காசு கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்தி விடைபெற்றுக்கொண்டேன்.

அடுத்தநாள் காலையிலேயே மேற்கு தீபெத்தின் லே பட்டணத்தைவிட்டு நான் ஜெபத்துடன் புறப்பட்டேன். அந்தப் பட்டணம் என் கண்களிலிருந்து மறையும்வரை நெஞ்சின் துயரத்தோடு அதைப் பஸ்ஸிலிருந்து திரும்பித், திரும்பி நோக்கினேன். கண்களில் கண்ணீர் பெருகிவிட்டது

மேற்கு தீபெத்திலுள்ள அந்த தாழ்வான வீட்டில் இரவின் குளிரில் சுருண்டு படுத்திருந்ததையும், நள்ளிரவு நேரங்களில் வானவெளியில் நீண்ட தொலை தூரங்கள் பறந்து செல்லும் வாத்துகள் (GEESE) எழுப்பின குரல்களையும், தேவனது சுவிசேஷத்திற்குத் தன் வாயை மட்டில்லாமல் ஆவென்று திறந்து நிற்கும் மேற்கு தீபெத்திய கிராமங்களையும், அதின் அன்பான மக்களையும் என் மரண பரியந்தம் மறக்கவேமாட்டேன்.

தேவனது மகிமையின் சுவிசேஷத்தை அநேக தடவைகள் கேட்டுக் கேட்டுச் சலிப்புத் தட்டிப்போயிருக்கும் கிறிஸ்தவ மக்கள் நிரம்பிய கூட்டங்களில் பிரசங்கித்து அவர்களுடைய புகழாரங்களைப் பெறுவதைவிட தேவனது சுவிசேஷம் எட்டாத இவ்விதமான பகுதிகளுக்கு வந்து சுவிசேஷத்தினிமித்தம் இம்மக்கள் என் முகத்தில் காரி உமிழ்ந்து என்னைத் துன்புறுத்துவதை நான் என் வாழ்வின் ஆனந்த பாக்கியமாகக் கருதி களிகூருகின்றேன்.

மேற்கு தீபெத்தின் பாதை என்னவோ நிச்சயமான மரணப் பாதைதான். இருப்பினும் அந்த நாட்டின் மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது எனது தலைமேல் விழுந்த கடமையாகும். அருமை நேசரின் வருகை தாமதிக்கும் பட்சத்தில் மீண்டுமாக ஒரு தடவை அங்கு சென்று மேற்கு தீபெத்தின் கடை எல்லையில் கிடக்கும் நுப்ரா பள்ளத்தாக்கு, ஸன்ஸ்கார் பள்ளத்தாக்கு, ஆரம்பத்தி

விருக்கும் ட்ராஸ் பள்ளத்தாக்கு போன்ற இடங்களில் வாழும் ஏராளமான புத்த மக்களுக்கெல்லாம் தேவனின் சுவிசேஷத்தைக் கூறிவரத் தீர்மானித்திருக்கின்றேன். அதற்காக நீங்கள் ஊக்கமாக ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்தப் பயணத்தை உடனே தொடங்குவது கூடாத காரியம். இவ்வாண்டில் கர்த்தருக்குச் சித்தமானால் நான் மேற்கொள்ளக்கூடிய வேறொரு சுவிசேஷ முயற்சியுண்டு. அந்தக் காரியத்திற்காகவும் உங்கள் ஜெபம் தேவை.

எல்லாவற்றிற்கும் மேலாக மேற்கு தீபெத்தில் விநியோகிக்கப்பட்டுள்ள ஏராளமான சுவிசேஷப் பிரசுரங்கள் ஏற்ற காலங்களில் மிகுந்த பலன் கொடுக்கவும், சந்திக்கப்பட்ட அனைத்து ஆத்துமாக்களுடனும் பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து இடைபாடு கொள்ளவும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்காக ஜீவனைப் பணயம் வைத்துச் சென்ற பாவிகளாகிய எங்களுக்கும், ஊக்கமான ஜெபங்களால் எங்கள் ஊழியத்தை மிகுந்த ஆசீர்வாதமாக்கிவிட்ட ஆண்டவருடைய அருமைப் பிள்ளைகளாகிய உங்களுக்கும் மிகுந்த பலன் கிடைக்குமல்லவா? அல்லேலூயா.

வாழ்வின் மேன்மையான நோக்கம்

"......இனிவரும் காலம் குறுகினதான படியால்......இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள்போலவும் இருக்கவேண்டும்......" (1 கொரி 7:29,31)

நம்முடைய கரங்களில் தேவன் கிருபையாக அளித்துள்ள நமது வாழ்வைக்குறித்து நாம் கொண்டுள்ளதான உயரிய நோக்கம் என்ன? கடந்து செல்லும் இவ்வுலகத்தின் மாயையான உலக இன்பங்களை மனங்கொண்டமட்டும் அனுபவித்து நமது வாழ்நாட்காலத்தை வீணே கழிப்பதுதான் நமது நோக்கமா? மனுஷீகக் கண்ணோட்டத்தில் வாழ்வின் அழகு, அதின் வனப்புகள், அதின் மனமகிழ்ச்சிகள், காதல் இன்பங்கள், இன்னும் அநேகமிருந்தபோதினும் அடுத்த கோணத்தில் உள்ளதான வாழ்க்கையின் கடும் போராட்டங்கள், துயர் நிறைந்த மரணம், முடிவில்லாத நித்தியம் போன்றவைகளை ஒருவன் ஒருபுறமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

"Live while you live", the epicure would say,
"And seize the pleasures of the present day".
"Live while you live", the sacred preacher cries,
"And give to God each moment as it flies".
Lord, in our view, let both united be,
We live in pleasure, while we live to Thee.

உலக இன்பங்களுக்காகவே உயிர் வாழும் ஒரு அறிவீன மான மனிதனை பண்டைய பக்தன் ஒருவர் ஒரு குழந்தைக்கு ஒப் பிட்டு எழுதியுள்ளார். அந்தக் குழந்தை என்ன செய்கிறதென்றால், அதல பாதாள (ABYSS) பள்ளத்தாக்கின் உயரமான விளிம்பில் ஒட்டி வளர்ந்து நிற்கும் மரம் ஒன்றில்ஏறி அதின் கனிகளைப் பறித் துப்புசித்து மகிழ்ந்துகொண்டிருக்கின்றது. ஆனால், அந்தோ என்ன பரிதாபம்! மரத்தில் அக்குழந்தை உட்கார்ந்து பழங்களைத் தின்று கொண்டிருக்கும் வேளையில்தானே, பகல், இரவு என்ற இரு புழுக் கள் அம்மரத்தை மெதுவாக அரிக்கத் தொடங்குகின்றன. இறுதி யாக அம்மரம் அக்குழந்தையுடன் கெடு பாதாளத்தில் வீழ்ச்சியுறு கின்றது குழந்தையும் சின்னபின்னமாகச் சிதறுண்டு செத்து மடி கின்றது. எந்த மனிதனாயினும், எந்த மனுஷியானாலும் சரியே, தங்கள் இகத்தின் நாட்களை உலகத்தின் இன்பங்களை அனுபவிப்ப தற்குச் செலவிட்டுவிட்டு நித்தியத்தில் பரம பாக்கியங்களை எதிர் நோக்குவது மதியீனமான மூட நம்பிக்கையாகும்.

வாழ்வின் பொன்னான வசந்த காலத்தைச் சிந்தனையற்றவித மாக உலக சிற்றின்பங்களிலும், கேளிக்கைகளிலும் வீணாகச் செல விடும் மாந்தர் கப்பல் சேதத்தில் அகப்பட்டுக்கொண்ட ஒருகூட்டம் மக்களுக்கு ஒப்பிடப்படுகின்றார்கள். கப்பல் சேதத்திலிருந்து உயிர் பிழைத்த அம்மக்கள் இறுதியாக வனப்பும், செழிப்புமுள்ள ஒரு தீவில் கரையொதுங்கினார்கள். அவர்கள் கப்பலிலிருந்து பாதுகாத் துக் கரைகொண்டு வந்து சேர்த்ததெல்லாம் தங்களது கோதுமை மட்டுமேதான். அவர்களில் புத்தியும், ஞானமுமுள்ள சிலர் கோது மையை செழிப்புள்ள அந்தத் தீவில் விதைக்கும்படியாகவும், இவ் விதமாக வருங்காலத்திற்குத் தேவையான கோதுமை கிடைக்கு மென்றும் ஆலோசனை கூறினார்கள். ஆனால் இதற்கிடையில் செழிப் பான அத்தீவைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த அவர்கள் கூட்டத்தி லுள்ள சிலர் ஒரு ஆச்சரியமான செய்தியைக் கொண்டுவந்தார்கள். தீவில் ஓரிடத்தில் விலைமதிப்பிடற்கரிய தங்கச் சுரங்கமிருப்பதாக அவர்கள் கூறவே, அனைவரும் தங்கத்தை சேகரிக்கும் பணியில் முழுமுயற்சியுடன் ஈடுபட்டு அளவிடற்கரிய பொக்கிஷங்களைத் தங் களுக்கென சேகரிக்கத் தொடங்கினர். இவ்விதமாக அவர்கள் கோடை காலத்தைத் தங்கள் கைவசமாயிருந்த கோதுமையைச் சாப்பிட்டுத் தங்கச் சுரங்கத்தில் செலவிட்டனர். திடீரென ஒருநாள் இலையுதிர் காலத்தின் காற்றுகள் வீசத் தொடங்கின. தங்களிடமி ருந்த கோதுமை தீர்ந்துவிட்டதை எண்ணிய அவர்கள் மீந்திருந்த கொஞ்சம் கோதுமையை நிலத்தில் விதைத்தனர். ஆனால் அவற்றை எலிகள் முதலானவைகள் தின்றுவிட்டன. இறுதியாகப் புத்தியீனமான அம்மக்கள் தங்களைச் சுற்றிலும் கோடானு கோடி விலைமதிப்புள்ள தங்கப் பாளங்களைக் குவித்துவைத்துப் பசி பட்டி னியால் மாண்டு மடிந்தனர்.

அன்பான சிநேகிதனே, வாழ்க்கையின் பரம நோக்கத்தின் தரிசனத்தை விட்டு, விட்டு அழிந்துபோகும் இவ்வுலகத்தின் லோக இன்பங்களை நாடித்தேடி ஓடுவாயானால் இலையுதிர் காலத்தின் கொண்டற்காற்று உனது மரணப் படுக்கையில் வீசுகையில் நீ யாது செய்வதென்றறியாது பிரலாபித்து ஓலமிட்டுக் கதறுவாய்.

“அறுப்புக்காலம் சென்றது; கோடை காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை’, (எரேமியா 8:20)

எந்த ஒரு ஐசுவரியவானும் தனது சம்பத்துக்கள் மேலுள்ள தான பாதுகாப்பு இன்சூரன்ஸின் காலக்கெடு முடிவுற்றுவிட்டதென்பதை நன்கு அறிந்திருந்தும் அதனைப் புதுப்பிக்காமல் துணிச்சலுடன் இரவில் தூங்கச் செல்லமாட்டான்.

அறிவுள்ள எந்த ஒருமனிதனும் தனது சாவாமையுள்ள ஆத்துமத்தைத் தெய்விக இன்சூரன்ஸில் உறுதியாக முத்திரையிட்டு ஸ்திரப்படுத்திக்கொண்டு “.......நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்” (2 தீமோ. 1:12) என்று கூறக்கூடியவனுயுமிருப்பான்.

(A. B. SIMPSON)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றுடகக் கிறிஸ்தவ பரிசுத்த வாழ்க்கையில் நாம் ஒரு பெருஞ் சேனையுடன் தினமும் யுத்தம் செய்துகொண்டே இருக்கிறோம். சத்துருவாகிய பிசாசானவன் தனது திரள் சேனைகளாகிய பொல்லாத ஆவிகளுடன் சேர்ந்து நிமிஷந்தோறும் நம்முடன் சமர் புரிந்துகொண்டே இருக்கின்றான். எப்படியாவது நமது ஆத்துமாவை நஷ்டப்படுத்தித் தனக்குமுன் குறிக்கப்பட்டதான நித்திய நரகாக்கினையில் நம்மையும் அவனுடன் சேர்த்து ஆழத்திப்போடவேண்டும் என்பதே சத்துருவின் ஒரே குறிக்கோளாகும். இந்த கொடிய தீச்செயலை நிறைவேற்றும் பணிக்காக அவன் தனது அனைத்துத் தீய ஆவிகளையும், சகல உபாய தந்திரங்களையும் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றான்.

ஆவிக்குரிய வாழ்வில் உறுதியாக முன் சென்றுகொண்டிருக்கும் தேவ மக்களுக்கும், ஆத்தும ஆதாயப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் பரிசுத்தவான்களுக்கும் எதிராக அவன் தனது அக்கினியாஸ்திரங்களைச் சரமாரியாகத் தொடுத்து எய்துகொண்டேயிருக்கின்றான். அவர்களின் வீழ்ச்சிக்காக அவன் எந்த ஒரு தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருப்பதுடன் அதற்காக அவன் உலகத்திலுள்ள எதனை வேண்டுமானாலும் அளிக்கத் தயாராகவும் இருக்கின்றான்.

அட்டைப் படத்தில் நாம் காண்பது மேற்கு தீபெத் புத்தமார்க்கத்தவன் ஒருவன் ஜெப மந்திரச் சக்கரத்தைச் சுற்றுவதாகும். மேற்கு தீபெத்தில் இவ்விதக் காட்சியை நாம் எங்கும் காணலாம். வலது கையால் ஜெபமந்திரச் சக்கரத்தைச் சுற்றிக்கொண்டு இடது கையால் ஜெபமாலேயின் மணிகளை நகர்த்திக்கொண்டு செல்லும் மக்கள் அநேகர் அங்குண்டு. ஏன் இம்மக்கள் இந்த ஜெப மந்திரச் சக்கரத்தை இராப்பகலாகச் சுழற்றிக்கொண்டேயிருக்கின்ருர்கள்? தங்களைச் சுற்றிலும் ஒரு பெருஞ் சேனையளவான பூதங்களும், துஷ்ட கடவுளர்களும் இருப்பதாக அவர்கள் திட்டமாக நம்புகின்றனர். பேய்களும், பூதகணங்களும் தங்களுக்கருகில் நின்று கொண்டு எழுப்பும் ஊளை ஒலிகளை அவர்கள் கேட்கின்றனராம். அவைகள் அனைத்தின் நாசியின் சூடான சுவாசங்கள் அவர்கள் மேல் படுகின்றதாம். அந்தப் பொல்லாத ஆவிகளின் நிழல் உருவங்களின் நடமாட்டங்களை இருளிலே அவர்கள் நன்கு காண முடிகின்றதாம்! எனவே அந்த அசுத்த ஆவிகள் எவ்விதத்திலும் தங்களுக்குத் தீங்கிழைத்துவிடாதிருக்கும்படியாக அவைகளைப் பிரியப்படுத்தி, அவைகளைச் சந்தோஷிப்பதற்காக அநேக துதி மந்திரங்கள் எழுதப்பட்டச் செப்புத்தகடுகள் நிறைந்த சக்கரத்தை அவர்கள் சதா சுழற்றிக்கொண்டேயிருக்கின்றனர். ஒருமுறை அந்தச் சக்கரத்தைச் சுழற்றுகையில் துதிகள் எழுதப்பட்டச் செப்புத்தகடுகளும் உள்ளே சுழலுகின்றன. வாயினுல் ஜெப மந்திரங்களைச் சொல்லுவதும் அதனைச் சுழற்றுவதும் ஒன்றெென அவர்கள் கருதுவதனுல் சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டேயிருக்கின்றனர்.

தீபெத்திய கிராமங்களில் சில இடங்களில் பெரிய பீப்பாய்களும் தண்ணீரின் உதவியால் இராப்பகலாகச் சுழலுவதை நான் காணமுடிந்தது. அதற்குள்ளும் ஆயிரக்கணக்கான ஜெப மந்திரங்கள் எழுதப்பட்டச் செப்புத் தகடுகள் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.

தங்களைச் சுற்றிலும் தங்களுக்குக் கொடும் இடர் விளைவிக்கக் கூடிய தீயஆவிகளின் திரள்கூட்டம் திட்டமாக உண்டென நம்பும் தீபெத்திய புத்த மக்கள் எபேசியர் 6:12-ஐ நாம் வெகு திட்டமாக விசுவாசித்துப் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய் விசுவாசமென்னும் கேடகத்தை நாம் தரித்துக்கொள்ளும்படியாக நம்மை ஏவி எழுப்பிவிடுகின்றார்கள்.

— — — —

மராத்தி மொழியில் எக்காளத்தின் செய்திகள்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மஹாராஷ்டிர மாநிலத்தில் அமைந்துள்ள பண்டிதை ராமாபாயின் முக்தி ஸ்தாபனத்தில் ஒரு தமிழ் சகோதரி இருக்கின்றார்கள். அவர்கள் பெயர் Miss வசந்தா டேவிட் என்பதாகும். M. Sc., பட்டதாரியான அவர்கள் தங்கள் வாழ்க்கையை முற்றுமாக ஆண்டவருக்குத் தத்தம்செய்து அங்கு பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். நான் கடந்த 1977-ம் ஆண்டு முக்தி சென்றிருந்தபோது அவர்களே என்னைச் சந்தித்தார்கள். தன்னுடைய ஜீவிய காலத்தில் மராத்திப் பெண்களுக்கு பயனுள்ள ஏதாவதொன்றைச் செய்யப் பெரிதும் தான் ஆவல் கொண்டிருப்பதாக அப்பொழுது அவர்கள் என்னிடம் கூறினார்கள். அந்த ஆவலின்படி மராத்தி மொழியை மிகவும் குறுகிய காலத்தில் நன்கு கற்று அம்மொழியிலேயே ஒரு மாதாந்திர கிறிஸ்தவப்பத்திரிக்கையையும் தற்பொழுது ஆரம்பித்துவிட்டார்கள். பத்திரிக்கையின் பெயர் "முக்தி பாஹினி" (முக்தி சகோதரி) என்பதாகும்.

"தேவ எக்காளம்" பத்திரிக்கையை மிகவும் அதிகமாக விரும்பி வாசித்துவரும் அவர்கள் எக்காளத்திலுள்ள குறிப்பிட்ட ஆவிக்குரிய நல்ல செய்திகளை மராத்தியில் மொழிமாற்றம் செய்து தங்களது "முக்தி பாஹினி"யில் வெளியிட்டுவருகின்றார்கள் என்பதை அறிந்து கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரிக்கின்றேன்.

திருமணமாகாமல் கர்த்தருக்குத் தன்னை முற்றுமாக அர்ப்பணித்து அவருக்கு ஊழியம் செய்துகொண்டிருக்கும் அன்புக்குரிய சகோதரியையும், அவர்களின் மராத்தி மொழிப் பத்திரிக்கையான "முக்தி பாஹினி"யையும் உங்கள் அன்பான ஜெபங்களில் மறவாது நினைத்துக்கொள்ளுங்கள்.

(பத்.)

Edited and Published by N. Samuel, Kotagiri-643217, Nilgiris
Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil